உ

கடவுள் துணை

# பெண்மை நெறி விளக்கம்.

இஃது
தமிழ் நாட்டுப்
பெண்கள் அனைவர்க்கும்
உபயோகமாகக்
கனவான்கள் பலர் கேட்டுக்கொண்டபடி,

சேலம்
கவர்ண்மெண்டு காலேஜிலும்
திரிசிரபுரம்
S. P. G. காலேஜிலும்
தமிழ்த் தலைமைப்புலவர்
**அ. க. அமிர்தம்பிள்ளை யவர்களால்**

செய்யப்பட்டு,
அரும்பதப்பொருளுடன்

திரிசிரபுரம்
"சதரன் ஸ்டார் அச்சாபீசில்"
பதிப்பிக்கப்பட்டது.

**1889**-௵ மார்ச்சு௴.

[*All Rights Reserved.*]

# OPINION.

Fr

Rev. JACOB GNANAOLIVU B. A.

Acting Principal & Manager

*S. P. G. College,*

Trichinopoly.

Mr. A. K. Amirtham Pillai, Head Tamil Pandit of the S. P. G. College, Trichinopoly and formerly of the Salem College, and author of the well-known Text Book on Tamil Prosody has produced an excellent Tamil Poem namely *Penmainerivilakam* for the use of our Countrywomen, who will find in it wholesome Counsels for the due discharge of their duties in various relations of life—as daughters, sisters, wives, daughters-in-law, mothers, mothers-in-law, and widows it aspires, in fact, to become *the whole duty of women.* Though intended primarily for Hindu women, the work as a whole, will afford profitable study to others as well. It clothes the noble sentiment of our Classical Tamil Moral Poets in language, elegant but not ostentatious, and at the same time advocates progress in various directions which must commend itself to all true patriots. The book may safely be placed in the hands of all girls, and it deserves the attention of our paternal Government which is solicitous to ameliorate the condition of the daughters of this land. The glossary appended to the work must prove greatly helpful both to the teachers and the learners and it is hoped that the author will, ere long, be able to present to the public a lucid exposition of his own interesting work.

(Signed) JACOB GNANAOLIVU

Ag. Principal & Manager

*S. P. G. College,*

Trichinopoly.

11th February, 1889,
S. P. G. College
*Trichinopoly.*

# சிறப்புப்பாயிரம்.

உறையூர் மஹா வித்துவான்

## ஸ்ரீ-முத்துவீராசிரிய ரவர்கள்

## இயற்றிய

நேரிசை யாசிரியப்பா.

கண்ணகன் ஞாலத்துக் கண்ணுறுத றலையாத்
திருந்துதென் பொதியி லருந்தவ னொருங்
கழகப் புலவர் வழிமுறை தழீஇ
யாய்ந்தசெய் வத்தமிழ் வாய்ந்த வுலகத்து
மக்கட் சிறந்து மேருச்சுபல் புலவர்
வண்மையின் வகுத்தனர் பெண்மையர்க் கேதுக
வறநூல் சொல்லாக் குறைபா டொணாது
புலமும் புகழ்சால் குலமும் நலமுஞ்
சிறந்தோர் பலரெலாம் வேண்டத் திறஞ்சேர்
பருவ மேழும் வருமிய லாகப்
பாயிர முரைவகுத் தியற்றி வார
மிருபான் வகுத்தவற் றிருநூறு செய்கையிய
வெண்பா வெண் [illegible] வண்பா வு [illegible]
பண்பா [illegible] ண்பா லார்க்கெலாஞ்
செ [illegible] வழுத்தலா
வினை [illegible] பொரு [illegible] று
நிலை [illegible] புலவா விடப்பப்
பொ [illegible] மேனும் போகிறீஇ
வ [illegible] சால் கவிஞன்
உ [illegible] நடையினை
செ [illegible] கண்டோன்
சமய [illegible] வாய்ந்தோன்

சேரலத் தலத்துந் திரிசிர புரத் து
மாங்கி லேய மோங்குகழ கங்களி ற்
றலைமைப் புலமை நடாத்துஞ் சதுர ன
நிமிர்கடற் புவிபுகழ் நிலவு ம்
அமிர்த மெனும்பெய ரமைகமையோ னே.

சென்னை
கவர்ண்மெண்ட்டு நார்மல் கலாசாலையில்
தமிழ்ப்புலமை நடாத்திய,
திரிசிரபுரம் சோடசாவதானம்

**ம-ள-ள-ஸ்ரீ- க. சுப்பராய செட்டியாரவர்கள்**

இயற்றிய
நேரிசை யாசிரியப்பா.

திருத்தகு புலமை சீர்த்தமுச் சங்கத்
தருத்தகு மூழியி னுவந்தினி திருந்த
தெய்வப் புலமைச் செந்நாப் புலவர்கள்
வையத் துரைத்த மன்னுபன் னூல்களும்
நுண்பொருள் வாய்ந்துபன் னூல்களுக் கெல்லையாய்
நண்ணிமைந் தருக்கே நன்கமைந் துற்றன
கடலுல கதனிற் காரிகை யார்க்கோ
ரிடனமை நூலொன் றிலதெனக் கவலும்
நன்மாண் புடையோர் நலங்கூர்ந்துவப்பப்
பெண்பா லார்க்கே பெரிதும் பயன்பட
மூன்றி ரண்டுநான் காறுறு றெறுன்
பஃதென வுறழ்ந்த வஃகமில் பருவப்
பேதை முதலாப் பேரிளம்பெண் ணீறு
வோதுமொவ் வொன்றிற் குறுமிய னிரல்பட
முன்னர் நிறுவி முறைப்படப் பெய்து
பின்ன ரொழிந்ததைப் பெரிது நுவலாக்
கடவுள் வணக்கமுதல் கைம்மைய ரொழுக்க
மிறுதியாக முறைபெற நிறீஇ

நாலைந் ததிகா ரங்க ளாகப்
பாலுற வியைந்தவெண் பாவாற் புனைந்தன ...
னன்னவன் யாரெனி லறையக் கேண்மோ ...
சொன்னயம் பொருணயந் தோன்றுபல் செய்யுளுந் ...
றுகளற நொடியிற் சொல்லு நிபுணன் ...
னிகலில்பல் புலவர்க் கியைந்த நண்பின ...
னிலக்கண மிலக்கிய முலப்பறக் கற்றோன் ...
னன்மா ணவர்க்கு நல்லறிவு கொளுத்த ...
வின்மாண் பென்று மியல்படச் செய்யு ...
ளிலக்கண மெளிய நடையி னியற்றியோன் ...
நலக்குறு நற்குண நல்லொழுக்குடையோன் ...
பூதிசா தனமே பொருளெனத் தேர்ந்தோன் ...
நீதிநூல் பலவு நெறிப்பட வுணர்ந்தோன் ...
தனக்கோ ரருளைச் சால்புற வகுத்தெனக் ...
கன்னற் படப்பையுஞ் செந்நெற் கழனியு ...
முக்கனி தூங்குவி ருக்கப் பொழிலும் ...
நாவிரி புகழ்சால் காவிரி நதியும் ...
புடைசூழ்ந் தொளிர மிளிர்சிர புரத்தோன் ...
வனப்புறு புகழே வாய்ப்பக் கருதுவோன ...
தனது ருங்குண நயங்க ...
அமிர்த மெனும்பெய ரமைந்தநா வலனே. ...

ஈரோடு டவுன் ஐஸ்கூல் தமிழ்ப்புலவர்

திரிசிரபுரம் சோடசத்வயாவதானம்

## ம-ள-ள-ஸ்ரீ - அ. இராமலிங்கம்பிள்ளை

அவர்க ளியற்றிய

நேரிசை வெண்பா. குளகம்.

வண்மைத் தமிழுலகின் மன்னு திறலாண்மைக்
கண்மை யருந்துணைமை யாகவமை—பெண்மை
நெறிவிளக்க மென்னுமுயர் நீதிநூல் யாண்டுஞ்
செறிவிளக்க மாகச் சிறந்து .. ...(க)

சிறந்தவெண்பா நாலைம்ப தெட்டியலிற் சேர்த்தீ
ரறந்தழையப் பேதைமுத லாமேழ்—திறம்பருவப் [சொல்
பெண்மையர்க்கு நற்செவிலித் தாய்சொல்லும் பெட்புச்
வண்மையுறச் செய்தான் மதித்து ... ... (௨)

மதித்த தமிழ்க்கடலின் மன்னமிர்த மாக
வுதித்த கவிசொல் லுரவோன்—துதித்திருந்தோன்
சேலந் துரைத்தனக லாசாலை சேர்ந்தோங்க
மூலத் தமிழ்க்கிறையா முன் ... ... (௩)

முன்னும் பலமதங்க ளாய்ந்தோன் மொழிவல்லோ
னின்னமிர்த மென்னுமியற் பெயரோன்—மன்னுஞ்
சிரபுரத்தி லெண்பீஜீ சீர்க்கலா சாலைப்
பரவுதமிழ்க் காதி பதி ... ... . (௪)

முற்றிற்று.

# பெண்மை நெறி விளக்கம்.

## பாயிரம்

### முதலாம் அதிகாரம்—கடவுள் வணக்கம்.

வெண்பா.

உலகு முடலும் முணவுங் கொடுத்தே
இலகு மறிவினையு மீந்து—நலமேவச்
சீலப் பொருளுணருஞ் செல்வி நமைக்காக்கும்
மூலப் பொருளுணர்வாய் முன்... ... (க)

காணக்கண் ணுங்கேட்கக் காதும் மலர்தொடுத்துப்
பூணக் கரமும் புகழுதற்கு—மாணிழையே
நாவும் பகுத்தறிய நல்லறிவுந் தந்தளிக்குந்
தேவுண் டெனநீ தெளி... ... ... (உ)

தாயின்றிப் பிள்ளை தழலின்றி யேபுகைபூ
காயின்றித் தீங்கனிநாங் கண்டிலமே—சேயிழையே
இவ்வுலகு மெவ்வுயிரு மின்புமுண்மை யான்முதலு
டவ்விறையைப் போற்று யறிந்து... (ங) [ண்

உண்டி யுதவுவோர்க் குற்ற வினைசெய்தல்
மண்டலத்தில் யார்க்கும் வழக்கமே—ஒண்டொடியே
அன்ன மளித்திங் கருளில் நமைக்காக்கும்
முன்னவனைப் போற்றுவாய் முன்... ... (ச)

புத்திகெட் டாத புதுமையாய் நம்முடம்பைச்
சித்திரித்துத் தந்தவொரு தெய்வத்தைத்—தத்தை
மொழியாய் புகழ்ச்சி மொழிவாய் பிறவி
ஒழியாய் கவலை யொழிந்து... ... ...(ரு)

தேவ ரெவர்க்குந் தெரியாப் பரம்பொருளைப்
பாவா யுலகிற் பலசமயர்—நாவாயால்
ஓதியா துண்மை யுணர்ந்தார் புலைநெறியில்
பேதியா துண்மை பெறு... ... ...(சு)

மெய்ப்பொருளா மீதென்று மெய்யறிவாற் காண்பதன்றி
இப்பிறப்பா லெய்தும் பயனில்லை—செப்பும்
உலக ருரைக்கடங்கா வொண்பொருளைக் காண்பார்
இலகிய மெய்யறிவோ ரே... ... ...(எ)

எல்லா வுயிர்க்கு மிறைவன் முதலென்பர்
நல்லா யுலகியலை நன்குணர்ந்தோர்—எல்லா
எழுத்தோடுங் கூடி யிசைத்துத் தனிக்கும்
எழுத்தகரம் போல விசைந்து... ... (அ)

விருப்பு வெறுப்படையான் மேல்கீழென்றெண்ணுன்
பருப்பொருளும்நுண்பொருளும்பற்று—னிருப்பென
ஓரிடையிலானுயர்வோடொப்பிலான்செப்பரியன்
ஏரிடையா யின்றே னிறை... ... ...(கூ)

தனக்கு முதலில்லான் தான்முதல்வ னின்பந்
தனக்கு வரம்பில்லான் தானே—நினைக்கரிய
முற்றறிவ னொப்பில் முழுவலியன் நாளில்லான்
கற்றறிவாய் நீயிறைவன் காண்... ... ...(ய)

உ-ம் அதிகாரம்—பெரியோரைப் பணிதல்.

தாய்மொழியின் மிக்க தகைமொழிவே றில்லைசே
யாய்வயிற்றி லேந்தி யரிதீன்று—வாய்முலைப்பால்
ஊட்டி வளர்த்த வுயரன்பை யுள்ளத்தே
நாட்டிப் பணிந்தொழுகல் நன்று... ... (க)

பிள்ளை பெறத்தலைவற் பேணிக் கருவுற்றுத்
தள்ளி வயிறு தளர்ந்தின்றே—உள்ளம்
மகிழ்வாகிப் போற்றி வளர்த்தநற் றாய்சொல்
இகழாமற் கொள்வ தினிது... ... (உ)

தந்தைசொல் லின்மிக்க மந்திரந் தானில்லை
முந்தத் தவங்கண் முயன்றீன்று—நந்தாத
செல்வ மெனச்சிறப்புச் செய்யும் பிதாப்பெருமை
சொல்வரிது நாளுந் தொழு...... .... ...(௩)

குலம்பெருகத் தானிச்சை கொண்டினிது பெற்று
நலம்பெருகச் செல்வமா நாடிப்—புலம்பெருகச்
சந்ததமுங் கற்பித்துத் தாயினுமன் பாய்வளர்த்த
தந்தையின்மேற் றெய்வமில்லை தாழ்... ... (௪)

கல்வி பயிற்றுங் கணக்கா யருமறிவு
செல்வம் வளர்விக்குஞ் சேதனரும்—நல்வழியைக்
கற்பிக்கு மூத்தவருங் காக்குங் கருணையரும்
பொற்புடையாய் தேவரெனப் போற்று... ... (௫)

வாழ்க்கைக்குறு துணையைமாதவத்தாற்பெற்றெடுத்து
தாழ்ச்சியில்லாஅன்பால்தலையளித்து-வாழ்த்தியே [த்
மாமனைவாழ்க் கைக்கு மணம்புரிவித் தன்புசெய்யும்
மாமனைமுப் போதும் வணங்கு... ... ...(௬)

இல்லறஞ்சித் திப்பதற்கு மின்பப் பெருவாழ்வும்
நல்லறஞ்செய்புத்திரரும்நண்ணுதற்கும்-நல்லறிவாய்
மாமனை வாழ்க் கைத்துணையை வாய்ந்தளித்துக் கார
மாமனையெப் போதும் வழுத்து... ...(எ) [ணமாம்

பேதமின்றி யுள்ளமொன்றிப் பேரறஞ்செய் தின்பநல்
காதலனை யன்பிற் கடிபுரிந்து—தீதற்றுக் [குந்
தாயினைந்து வாழமுதற் சாதனமா யன்புசெய்யும்
மாமியைநற் சாமியென வாழ்த்து... ...(அ)

குலமறிவு செல்வங் குறையாம லோங்க
நலமருவு மில்வாழ்வு நண்ணிப்—பலமருவ
இன்பப் பெருந்துணையை யீன்றளித்த மாமிதனை
அன்புற்றுப் போற்ற லறிவு... ... ...(கூ)

துறந்து தவமுடையோர் தூமொழியோர் நல்ல
அறந்தழையச் செய்வோ ரறிவிற்—சிறந்தநூல்
வல்லோர் குடிப்பிறந்த வாய்மை நெறிக்கிழவர்
நல்லோ ரிவர்ப்பணிதல் நன்று... ... (ய)

## முதலாவது-பேதை யியல்.

### ௧-ம் அதிகாரம்—கல்வி.

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம்—கல்வியே
செல்வப் பொருளின்பஞ் சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு... ...(க)

கல்வி யறிவுதருங் கற்பை நிலைநிறுத்தும்
இல்வாழ்வுக் கேற்ற வினைவெல்லாஞ்-சொல்விக்கும்
இந்நிலத்து மேன்மையெல்லா மெய்துவிக்கும் முத்தி
அந்நிலத்துக் குற்றதுணை யாம்...(உ) [யெனும்

கண்ணின்றி நீடு வழிச்செலவுங் காதின்றி [ணின்றிப்
உண்ணின்ற மெய்மறைச்சொல் லோருதலும்—பண்
பாடலும்போ லாந்தொன்னூல் பண்ணும் பொருளுண
நீடுலகில் வாழும் நிலை... ... ...(௩)ரார்

கண்ணின்றிக் காட்சியிலை காதின்றிக் கேள்வியிலை
எண்ணின்றிச் செய்கை யிலைபோல—எண்ணில்
சிறப்பா மறிவில்லை தேர்கல்வி யின்றேல்
பிறப்பாற் பயனுமில்லை பின்... ... ...(௪)

கல்லாம லேயறத்தைக் கற்பைத் தலையளிக்கும்
நல்லார்க்குக் கல்வி நயனமுறில்—பொல்லாதோ
வாளின்றி யேபகையை வாட்டவல்ல சூரனுக்கு
வாளிருந்தாற் போமோ வலி... ... (௫)

மெல்லியல் மெய்யழகொன் றுல்விழைவோ ரென்று
கல்வியழ குஞ்சேரக் கண்டக்கால்—கல்வியறி [வர்
கற்புடையாய் மேன்மேல் களித்துப் புனையாரோ
பொற்பூ மணங்கமழ்ந்த போது... ... (௬)

குடிப்பிறந்து மெய்யெழிலுங்கொண்டொளிர்மின் னாைப்
படிப்பழகுஞ்சேர்ந்திருக்கப் பார்த்தல்—கடிப்பொலி
கற்பகம்பொற் பூமலர்ந்து மாணிக்கமேபழுத்து [யுங்
நிற்பதுவே போலும் நிலத்து... ... (௭)

ஔவைகூ டாலை யணிகாஞ் சனமாலை
ஔவியமில் மங்கைக் கரசிமுதல்—திவ்வியநல்
லார்கல்வி யாற்பலபே ரான்ற புகழ்படைத்தார்
ஆர்கல்வி யாற்சிறவா தார்... ... ... (௮)

கணக்கு மிலக்கணமுங் காதறரு பண்ணும்
பிணக்கில் மருத்துவமும் பேதத்—துணர்ச்சிதரு
சிற்பமுமென் றிவ்வைந்துந் தேருங்கா லைம்புலனும்
கற்பவர்க்குள் ளாமுலகங் காண்... ... (௯)

எண்ண லெழுத லிலைகிள்ளல் பூத்தொடுத்தல் [வுடை
பண்ணமைய யாழிசைத்தல் பஞ்சிழைத்தல்-வண்ண
தைத்தலுருசித்திரம்பூண் தண்சுதைவெண்கோலமுதல்
கைத்தொழில் நூல் கற்றல் கடன் ... (௰)

## ௨-வது—பெதும்பை யியல்.

### ௪-ம் அதிகாரம்—உண்பொருளுணர்ச்சி.

நெல்லரிசி யால்வடியல் நெய்யளா விப்பொங்கல்
நல்லபுளிந் தாளிதநற் பாளிதங்கள்—பல்லசுவை
அப்பம்பிட் டாதி யவிபா யசங்கஞ்சி
செப்படுசில் நூலுணர்ந்து செய் ... (௧)

கோதுமைநுண் மாவால் குறுநொய்யி னற்பலவாம்
மோதகமுங் கூழும் முதலியவை—ஓதுகின்ற
பாகநூ லாலுணர்ந்து பண்பாகச் செய்தறிவி
வேகமுள்ள மாதே விழைந்து ... ... (௨)

வாழ்வார்க்குக் கோதுமையின் மிக்க வலுச்செய்யுங்
கேழ்வரகின் நுண்மாவால் கிண்டுகளி—சூழ்வகையும்
பண்ணிகா ரம்பலவும் பாவைபோல் வாய்சமைக்க
எண்ணித் தெரித லினிது... ... ... (௩)

வெம்புங்குழந்தைக்குத் தாய்ப்பால் மிகப்பெருக்கும்
கம்பதனைச்சோறாக்கக் கற்றறிவாய்—அம்புவியில்
சோளஞ் சுகமென்று சொல்லுவா ருண்டறிந்தோர்
நீளங்க ணாய்சமைப்பாய் நீ ... ... (௪)

வரகு தினையை வனங்கானில் குன்றில்
பரவு மனிதருண் ணும் பண்டம்—விரவியசெந்
தேனுந் தினைமாவுந் தேவருண வாம்மயிலும்
மானும் நிகர்ப்பாய் மதி ... ... ... (௫)

துவரை கடலை யுளுந்து சுவைசேர்
அவரை பசும்பயறே யாதிச்—சுவைமிகுந்த
முற்க வகையை முறைமையா கச்சமைக்கக்
கற்கை மகளிர் கடன் ... ... ... (சு)

கிழங்கிலைபூ காய்கனியுள் கேடிலுணவாய்
வழங்குவகை யெல்லாம் வகுத்துக்—குழம்பு
பொரிய லவியல் புரட்டல் துவட்டல்
தெரியலே மாதர் சிறப்பு... ... ... (எ)

உப்பும் புளிப்பு முரைப்புந் துவர்ப்பினிப்புங்
கைப்பு மறுசுவையாங் கண்டறிந்தே—ஒப்ப
அளவாகச் சேர்க்கை யறிதலே யுண்டி
நளபாகம் போற்சமைக்க நன்று ... ... (அ)

சீரகமும் வெந்தயமுஞ் செங்கடுகுங் காரடகும்
ஈருள்ளி யும்முழுந்து மென்னுஞ்சம்—பாரங்கள்
ஆனநெய்யெண்ணெய் வார்த்துமண மாரச் சமைக்கவாம்
மானேர் கண்ணாய் மதி... ... ... (கூ)

உப்புப் புளிமிளகா யூர்மிளகு கொத்துமல்லி
கைப்பில் பெருங்காயம் வெண்காயம்—முப்பால்
அடுசிற் குறிப்பொருள்க ளாமிவற்றைத் தேர்தல்
வடுவிலா மாதர் வளம்... ... ... ...(ய)

## ரு-ம் அதிகாரம்—செய்தொழில்.

அட்டி லடுகலங்க ளாதிக் கருவிகளும்...
கட்டி லகம்புறமுங் காலையிலே—முட்டின்றி
நாளுந் துலங்க நவைதீர வேவிளக்கி
ஆளுஞ் செயலே யழகு... ... ... ...(க)

அன்னங் குழம்புசுவை யான கறியிரசம்
சொன்ன விவற்றின் றொகையுடனே—இன்னபல
வற்றல் வடகந் துவையல் வகைசெய்யக்
கற்றல் மடவார் கடன் ... ... ... (உ)

அப்பம் வடையோ டதிரச மெள்ளுண்டை
துப்பா ரிலட்டுச் சுகியந் தேன்—வைப்படைசூழ்
சீரணி பூரிருக்குத் தேனெய்பா காற்செய்தல்
ஏரணிபூண் மாத ரியல் ... ... ... (௩)

உணவுப் பொருள்வரவு முற்ற செலவும்
பணிவா மும்மெழுதப் பண்ணும்—மணமார்
வழுத்துந் துதிப்பாட்டும் வாசகமுந் தீட்ட
எழுத்துப் பழக வினிது... ... ... (௪)

பனைகமுகு தெங்கம் பசுங்குருத்த சோக
நனைமா தவிபடலி நாகம்—புனைதளிர்தே
மாவை யிலைநறுக்கி வாழ்மனைக்கோ லம்புனையப்
பாவை பயிலல் பயன் ... ... ... (௫)

மல்லிகை வெட்சி மகிழ்சண் பகமலரி
முல்லை செவந்தி முதலாய—நல்ல
மலரால் தொடைசெண்டு மாலைதா ரின்ன
பலதொடுக்கக் கற்றல் பயன் ... ... (௬)

பன்னிறப் பட்டும் பலவண்ணப் பூந்துகிலும்
மென்னிறக் கச்சங்கி மேகலைகள்— இன்ன
உடைசித்தி ரப்படம்பொன் ஒள்ளிழைப்பூ வேலை
நடைதெரிந்து தைத்தல் நலம்... ... (௭)

முத்துப் பவளம் முதல நவமணியால்
ஒத்த வினைஞ்சேர்த் தொளிர்மாலை—கொத்துவடம்
வாரந் தலைக்கோலம் வண்குதம்பை மேகலா
பாரமின்ன கோத்தல் பயன்... ... (அ)

சங்குசிப்பி வெண்பளிங்கு சாலியரி மாமஞ்சள்
குங்குமஞ்சிந் தூரங் குளிர்பச்சை—இங்கிவற்றால்
சாலமணக் காவணஞ்சீர் சான்றமனை கோவிலினற்
கோலமணி வாள்பெண் கொடி.... ... (கூ)

சாதிலிங்கம் வெள்ளையரி தாரம்பூ மைபச்சை
ஆதிவண்ணம் வர்த்திகளா லந்துகிலில்—மாதலத்தில்
கண்ணாடி யிற்படத்தில் காண்சித் திரமெழுதல்
பண்ணாருஞ் சிறபப் படி... ... (ய)

## ரு-வது—மங்கை யியல்.

### கூ-ம் அதிகாரம்—பொருட்பேணுமை.

நல்லபசுஞ் சாணத்தை நன்னீரி லேகரைத்துப்
புல்லலகால் நன்கு பெருக்கியபின்—செல்வமனை
உள்ளும் புறமு முலர மெழுகிமேல்
வெள்ளியகோ லஞ்செய் விரைந்து... ... (க)

உண்டி சமைத்தற் குரிய பலகலம்பல்
பண்டமுறும் பாத்திரநீர்ப் பாத்திரநீர்—கொண்டுபுளி
சாம்பலிட்டுத் தேய்த்துக் கழுவிச் சவிவிளங்கச்
சோம்பலற்றெப் போதுந் துலக்கு ... ...(உ)

கற்பாத் திரங்கள் கவினார்மண் பாண்டங்கள்
இற்பா லகப்பை யிவையனைத்தும்—நெற்றாளால்
மாசகலத் தேய்த்துக் கழுவி வளப்படுத்தல்
தேசமைந்த நல்லார் செயல்... ... ...(ரு)

ஆய்பஞ் சணையை வெயிலுலர்த்த லவ்வுறையைத்
தூய்தாகநன்னீரில்தோய்த்துலர்த்தல்- பாய்போர்வை
நீரிலே தோய்த்து நிதமுலர்த்தல் செய்வாரே
பாரிலே நீடுசுகிப் பார்... ... ... (ச)

உடுத்த வுடையாடை யூர்குழந்தை யெச்சந்
துடைத்த துணிபோர்வை தொட்டில்—படுத்ததுயில்
இன்னவற்றைத் தோய்த்துலர்த்தி யின்பப் புகைகொ
நன்னலத்தர் நாகரீ கர்... ... ...(ரு) [டுப்பர்

வாசமனை யுட்புறத்தே மாசொட் டடைதுடைத்துத்
தேசடையச் சுண்ணமெங்குந் தீற்றியே—வீசுதீ
நாற்றமற நீர்த்தூம்பும் நாற்புறமுந் தூய்மை செய்து
போற்றுவார் நோயுட் புகார்... ... (சா)

கட்டிவைத்த தானியங்கள் காயவிட்டுக் கோதகற்றி
இட்டகலங் காயவைத்துப் பின்னிடலும்—பிட்டபல
ஊறுகாய் வற்ற லுலரத் தினம்போற்றல்
மாறுறு வாழ்க்கைக்கு மாண்பு... ... (எ)

விழுப்பொன் மணியணியும் மெல்லுடையும்மெய்யும்
அழுக்குறு தாளு மறிவோர்—அழுக்கடைந்து
பாலர் திரியமனைப் பண்டமுண்டி பாங்கழியச்
சீலங் கெடத்தூங்கார் தின்று... ... (அ)

பண்டமும் பாத்திரமுந் தூய்மையுறப் பாகஞ்செய்
உண்டியுந் தேவ ருணவாகி—உண்டவர்க்கு
நோவில்லா வின்பத்தில் நூறுண் டினுமதிகஞ்
சாவில்லா வாழ்வு தரும்... ... ...(கூ)

தூயவல்லா வுண்டியால் தோயா வழுக்குடையால்
பாயணையில் மாசு படிதலால்—தீய
பிணியா லுடல்வருந்திப் பெற்ற நாள் குன்றித்
தணிவார் விவேகமில்லார் தாம் ... ... (ம)

## எ-ம் அதிகாரம்— தற்றூய்மை.

விடியுமுன் னேயெழுந்து மெய்வாய் கழுவி
வடிவு திருத்தியுடை நீத்து—மடியுடுத்துத்
தெய்வம் பரவிச் சிறக்க மனைவிளக்குஞ்
செய்வது தூய்மை தினம் ... ... (க)

காலை யெழுந்து கடிமனையின் முன்செய்யும்
வேலைமுடித்துடுத்தமெல்லுடைதோய்த்--தேலநறுஞ்
சுண்ணநீ ராடித் துகிலுடுத் தின்னடிசில்
உண்ணச் சமைத்த லுயர்வு ... ... (உ)

உதயத்தி லின்றேனு முண்ணுமுன் னேனும்
நிதநித்த நீராடல் நெய்யா—நிதனித்தம்
மாலை மணமஞ்சள் நீராடி மாசற்ற
சேலை யணிபுனைதல் சீர்... ... ... (ந)

நெய்யாலெரியும் விளக்ககத்துள் நின்றவியுங்
கையார் மணிவிளக்குங் காட்டாது—பொய்யாத
சொல்லா கியவிளக்கே தூயநல்லா ரேற்றுவிளக்
கெல்லா வுலகினுக்கு மிங்கு ... ... (ச)

மிகைச்சொல் கடுஞ்சொல்வீண் வீம்புச்சொல் வீறு
பகைச்சொ னுணில்சொல்பழிச்சொல்-நகைச்சொல்சீர்
வாய்மையில்சொல்லின்னமாட் சிமைப் பெண்பேசாத்
தூய்மையில் சொல்லாந் துணி ... ... (ரு)

பொருளார் கலைச்சொல் பொறைசேர் நயச்சொல்
அருளாரு மின்சொல் லறச்சொல்—தெருளார்சொல்
தூய்மைச்சொல் லின்னவையே தொன்மாண் குடிப்
வாய்மைச்சொல் நல்லார் வழக்கு ...(சு)[பிறந்த

பேராசை வீணெண்ணம் பேதைமை நீக்காமம்
சேராத வஞ்சஞ் சினம்பிசுனம்—நேராப்
பொறாமையே முன்னுன புன்மைக் குணங்கள்
உறாமையே யுள்ளத் துயர்வு ... ... (எ)

மானம் பொறையன்பு வண்மை யருளுண்மை
ஞானஞ்சிரத்தை நடுநிலைமை—ஆன
இவையெல்லா மெய்தி யிலங்குமுயர் நல்லார்
நவையிலா வுள்ளத்தில் நன்கு... ... ...(அ)

நீராலுடலழுக்கு நீங்கியழ காம்நல்ல
நீரா லுளங்களங்கம் நீங்கியொளி—நீராஞ்சொல்
உண்மையால் சொற்றூய்மை யுற்றொளிருஞ் செய்வி
வண்மையால் சீர்த்தொளிரும் மன்... (சு) [னையும்

மெய்த்தூய்மையால்பிணிகள் மேவாவுணவொடுசெய்
கைத்தூய்மை யாலின்பங் கையகலா—மெய்த்தசொல்
தூய்மையால் சீர்த்தி தொகுமுள்ளத் தூய்மையால்
வாய்மையிரு செல்வம் வரும்... ... ...(ய)

அ-ம் அதிகாரம்—மணமகன் நலம்.

குடிவழுவில் லாதான் குணத்தான் மிகுத்தான்
வடிவில் குறையான் வளத்தான்—அடுதிறலான்
பொறுப்புடையான் பன்னூற் புலமையான் கொண்க
கற்புடையா யேதுகுறை காண் ... (க)[னேல்

நன்னூற் கடல்கள் பலகடந்து நாவாயில்
பன்னும் பொருள்கள் பலநிறைத்து—மன்னவையை
அஞ்சாத சொல்வலியு மாண்மையும் நன்னடையும்
எஞ்சான் கலைச்சிங்க வேறு.... ... ... ... (உ)

கரிபரிதே ரூர்தல் கதப்படை நடாத்தல்
பொருபடையை யாளல் புகல்நூல்-தெருளுடையன்
சூரமரு வீகைபேர் தொன்னூ லறிவுடையான்
வீரசிங்க மாம்புவியின் மேல்... ... ... ...(ங)

பொன்னும் மணியினமும் போதவுளான் நெல்முதலா
தின்னும் பொருளின்திரளுடையான்-தொன்னூல்[ம்
நடையான் தனுவசைந்தால் நாடசையும் நல்லான்
கொடையான் குபேரனரர்க் குள்... ... ... (ச)

நிலவளமும் மிக்க நிதிவளமும் மேன்மைக்
குலவளமு மாண்மையுங் குன்றுப்—பலவளமும்
ஐந்தருநே ருங்கொடையு மான்ற புகழுமுளான்
இந்திரனு மிந்நிலத்தி லே... ... ... ... ...(ரு)

மடிதுயில் மந்தம் மறப்பின்றி யாதும்
முடியும் முயற்சியுளான் முந்து—குடியறிவு
வாய்மை பொறுமை மனைவிபால் காதன்மை
தூய்மை யுடையான் துணை ... ... ...(சா)

கள்ளான் களியாடான் காதல் பிறன்மனைபால்
கொள்ளான் மனைவி குணமுவப்பான்—எள்ளான்
உணவாடை நல்கி யுவந்தென்றுங் காப்பான்
மணவாள னும்பெண் மணிக்கு ... ...(எ)

அன்னமளித் தூக்காக்கு மன்பினா லன்னையாம்
தன்னறிவு நல்குதலால் தந்தையாம்-பொன்னனையாய்
சாதன்மை யுள்ளங் கலந்தின்பம் நல்குதலால்
நாதனுங் காதலவன் நாடு... ... ...(அ)

நல்வழியைக் காட்டுதலால் கண்ணும் நலந்தீது
சொல்வதனா லேயறிவாந் தோய்கணவன்—செல்வியே
மெய்யைக் கலந்துள்ளம் மேவிச் சுகவிளைவு
செய்கையால் நல்லுயிராந் தேர்... ... ...(௯)

கொண்டா னினைந்து மகிழுங் குலமகளும்
பெண்டாட்டிக் கொத்த பிரியனும்—உண்டானால்
இல்வாழ்க்கை யெத்திறத்து மின்பஞ்செய் தேந்தி
நல்வாழ்க்கை யாமவர்க்கு நாடு. (௰) [ழையே

## ௪-வது-மடந்தை யியல்

### ௯-ம் அதிகாரம்—கற்புடைமை.

தெய்வங் கொழுந னெனப்பணியுந் தேமொழிதான்
பெய்யென்னில் பெய்யும் மழையென்னில்—பொய்
கற்பிற் சிறந்த பொருளுளதோ கற்றுயர்ந்தோர்[யாத
அற்புதத் தெய்வீகமென் பார்... ... ...(௧)

அன்னைபோல் நாயகனை யுண்பிப்பா ளத்தனைப்போல்
மன்னுமறி வுந்திருவும் மல்குவிப்பாள்—துன்னுபகை
வெல்லத் துணையாவாள் மெய்யின்பஞ் சேர்விப்பாள்
நல்ல குடிக்கற்பி னாள்... ... ... ...(௨)

இல்லறத்தில் நல்ல துணையாய்த்தன் இன்துணைக்குச்
சொல்லறத்தில் நின்று சுகஞ்செய்து—வல்ல
அமைச்சனில் சூழ்ச்சிக் கருந்துணையு மாவாள்
கமைச்சீர்க் குடிப்பிறந்தாள் காண் (௩)

கொண்டான் குறிப்பின் வழியொழுகிக் கூறிவால்
உண்டி யினிது சமைத்தூட்டிக்—கொண்டான்
வருவாய்ப் பொருளை வளப்படுத்து வாளைத்
திருவும் பணிபுரிவாள் சேர்ந்து ... ... (ச)

இருந்தபோ தன்றி யெதிரிராள் கொண்கன்
அருந்தியபின் அன்றி யருந்தாள்—திருந்த
அடிவருடிப் பின்தூங்கி முன்னெழுவாள் பெண்கள்
முடிவருடுந் தாள்தேன் மொழி... ... ...(ரு)

மாற்றவளுக் குன்னணியை யீந்து மகிழ்ந்தவளை
ஏற்றஞ்செய் துன்னை யிகழ்ந்தாலும்—சீற்றந்தான்
உன்கொழுநற் கெய்தாம லுள்மகிழ்வா யொத்திருப்
நன்குயருங் கற்புடைநல் லாய்... ...(சு) [பாய்

தன்கொழுநற் பெற்றதாய் தந்தை யுடன்பிறந்தார்
இன்கேளிர் தம்மை யினிதருத்தி—நன்கோதிப்
போற்றி விருந்தோம்பித் தற்காத்துப் பொய்யில்சீர்
தோற்றுவாள் வாழ்க்கைத் துணை... ... (எ)

நாயகன்சொல் லைக்கடவாள் வைது நலித்திடினும்
தூயமனத் தன்பினொடு தொண்டுசெய்வாள்—நேயன்
வருந்தின் வருந்தி மகிழின் மகிழ்வாள்
திருந்து புகழ்ப்பெண் திரு. ... ... ...(அ)

மருந்திட்டுக் கொண்கன் வசப்படுதல் வேண்டி
வருந்துநோய் செய்வர்கீழ் மாதர்—திருந்தன்பால்
தன்கொழுநன் தன்கருத்தைச் சார்ந்தொழுகி யின்புறு
அன்படைவர் கற்புடைநல் லார்... ... கூ [த்தி

நிறையினால் நல்லார் தமைக்காத்து நிற்பர்
சிறைகாத்த லென்னபயன் செய்யும்—நிறைசெல்வன்
தன்பொருட்குத் தான்கள்வ னாவனேல் காவலேன்
பொன்பொருவு நல்லாய் புகல்... ... ...(௰)

௰-ம் அதிகாரம்—கூடாவொழுக்கம்.

தூய்மை யிலாமைசெயற் சோம்பல் பகலுறங்கல்
வாய்மை யிலாமைமித மட்டிலூண்—நோய்மைக்குக்
காரணமா மின்னவைகள் காணிற்கூ டாவொழுக்கம்
வாரணிபூண் மாதே மதி. ... ... ...(க)

தந்தகுதிக் கேலா வுடையூண் தமனியப்பூண்
எந்தவிதத் தேனுமெமக் கீகவெனத்—தந்தங்
கணவர் தமைவருத்தல் கள்ளாதி கொள்ளல்
குணமிலா மங்கையர்தங் கோள். ... ...(உ)

குறிசொல்லல் பேயேவல் கோள்சகுனங் கொள்கை
வெறியாட லுண்டாம் விதியென்—றறிவின்றி
நன்முயற்சி செய்யாமை நல்லோர்சொற் கொள்ளா
புன்மகளிர் வேட்கைப் பொருள் ... [மை (ங)

அயலார் குலம்பழித்தல் யாவரையு மெள்ளல்
நயவாக் குறையெவர்க்கும் நாட்டல்—அயலார்
சமயமி கழ்ந்துரைத்தல் தன்னைப் புகழ்தல்
கமையிலா மாதர்செய் கை... ... ... (ச)

கடைத்தலையி லாடவர்கள் காண விருத்தல்
அடக்கமிலா தேவெளியு லாவல்—உடுத்தமேல்
தூசு விலக வெளிப்படுதல் தொல்குலத்தின்
தேசு கெடுக்குஞ் செயல்... ... ... (ரு)

தந்தைதாய் மூத்தோர் தமரன்பர் சொல்லிகழ்தல்
முந்தறியா தாரயலார் சொன்முகத்தல்—முந்தறியார்
தம்மைத் துணைகொள்ளல் தம்மவரின் றித்தனித்தல்
வெம்மைத் துயர்செய் வினை... ... ...(௬)

காதலவன் சொற்படியே காமுற்றுச் செய்யாமை
வாதமெதிர் பேசல் வலிந்திருத்தல்—ஏதிலர்போல்
அன்புறுத லின்றி யயலில் பழியுரைத்தல்
துன்புறுகீழ் மாதர் தொழில்... ... ...(௭)

தன்கேள்வன் தாய்தமரைப் போற்றாது தானிகழ்தல்
வன்கோளு ரைத்தவர்க்கு மாறுசெயல்--தன்கேள்கட்
கில்லின் பொருளையொளித் தீத லிவையனைத்துஞ்
சொல்லின் துயர்செய் தொழில். ... ...(௮)

நன்சொலினுங் குற்றமே நாட்டுவாள் நாயகனைப்
புன்சொல்லுரைப்பாள்புறத்திகழ்வாள்-வன்சொற்கே
வாய்திறப்பாள் தூற்றி மடிபிடிப்பாள் வன்கண்மைப்
பேய்களென்று நல்லாய்நீ பேசு. ... ...(௯)

வாழ்மனையின் பண்டத்தை மாற்றிப் பணமொளிப்பா
பாழ்படவிற் றுத்தின் பலதின்பாள்—சூழ்கிளையை[ள்
எள்ளிப் பகைப்பா ளிறைவன் தனைப்பணிப்பாள்
கள்ளிபேய் நாய்பிணமாங் காண். ... ... (௰)

### ௰௧-ம் அதிகாரம்—மணமகன்றுணைசெயல்.

நாணமட மச்சம் பயிர்ப்பென்னும் நாற்குணமும்
பூணமர்ந்த கற்புடைய பொற்கொடிதான்—யாண
மணமகன்வாழ்க் கைத்துணையாய் வாழ்மனையிற் செ
குணமமைந்து செய்வாள் குறித்து ...(௧)...[ய்கை

ஞாயி றெழவெழுந்து நாயகனை நீராட்டித்
தூய கடவுள் தொழுவித்தே—ஆயடிசில்
உண்பித் துபசரித்தே யுற்ற பொருட்செயலில்
நண்பில் நடத்துவள்நல் லாள் ... ... ...(௨)

செய்தொழிலி னூற்பிரிந்தகொண்கனகஞ்சேர்ந்தக்கால்
பொய்தொடரா வன்போடு பூசித்து—மெய்தொடர்ந்த
துன்பந்தீர்த் துள்ளத்தில் சூழ்கவலை மாற்றிமகிழ்
வின்பஞ்செய் வாள்துணைவி யே ... ... ...(௩)

பொருண்முயற்சி யாற்பிரிந்து போந்த துணையை
அருண்முதிர்ச்சித்தாய்போலவாவித்—தெருண்முதிர்
சொல்லாற் செயலினால் தூவுணவாற் சூழ்ச்சியால்
நல்லாள் மகிழ்விப்பாள் நன்கு... ... ...(௪)

உடைதிருத்தல் நாயகனுக் குற்ற தொழிற்காம்
படைதிருத்த லில்லில் பயன்சேர்—நடைதிருந்தச்
செய்யுந் தொழில்பயின்று செய்த வினைமனைவி
செய்யுந் துணைமைச் செயல்... ... ... (௫)

கற்ற கலையுணர்வால் காதலவன் செய்தொழிலுக்
குற்ற துணையா யுடன்பட்டால்—நிற்றல்
பொருள்பெருகி யின்பம் புகழ்பெருகித் தெய்வ
அருள்பெருகும் நல்வாழ் வவர்க்கு... ... ... (௬)

மாலையி லுண்டி வகைமுடித்து மற்றுஞ்செய்
வேலைமுடித் துப்படுக்கை மெல்லணையில்—சீலமுற
யாழிசைத்துப் பண்பாடி யன்பனையின் பக்கடலுள்
ஆழ்விப்பாள் பெண்ணமிர்த மாம்... ... ...(௭)

வரவு செலவுக் கணக்கெழுதல் மாட்சி
பரவுநா லையம் பகர்தல்—பொருவெம்
படைதிருத்த லேவற் பரிசனத்தை யாளல்
உடையதொழி லாமனைவிக் கு... ... ...(அ)

பட்டியில் காலியினம் பல்குவித்தல் பால்நறுநெய்
கட்டித் தயிர்மாற்றிக் காசீட்டல்—நட்டுக்
குழிப்பயிர்கள் பூங்கொடிகள் கூர்கமுகு வாழை
செழிப்புறுத்தல் மாதர் செயல்... ... ...(கூ)

பொற்பணிகள் செய்தல் புனையும் நவமணிகள்
நற்பண்பு தேர்ச்சியினால் நன்காய்தல்—முற்கமொடு
நெல்லரிசி யுண்பண்டம் நேர்ந்து விலைவனைதல்
இல்லாள் துணைச்செயலா மே... ... ... (ய)

## ரு-வது—அரிவை யியல்.

### யஉ-ம் அதிகாரம்—மருத்துவம்.

உணவுதொழில் கள்மிகுந்தா லுங்குறைந்தா லுந்தீப்
பிணிசெய்யும் வாதமையம் பித்தம்—துணிவாய
உடலி னளவறிந்தே யுண்டுதொழில் செய்கை
கடனு முதல்மருந்தாங் காண்... ... ... ...(க)

வயிறு பசித்தபின்பு மட்டாக வுண்டல்
செயிரில் பொருளுண்டி செய்தல்—உயிருடம்பில்
நீடமருஞ் செய்கையாம் நீராட லூணுறக்கங்
கூடவிவை காலத்தால் கொள்... ... ...(உ)

காலையிலே பித்தங் கடும்பகலி லேயையம்
மாலையிலே வாதம் வருத்தாமல்—காலம்
உடலின் கருவிகளுக் கொத்தவுண்டி செய்கை
தடைகல் பிணிவழிக்குத் தான்... ... ... (ங)

சொன்ன படியுடலுஞ் சூழ்பொருளும் வாழ்மனையும்
தன்னுடல்கா லங்களுக்குத் தக்கவகை—தின்னுண
தூயவைக ளாகுமேல் சூழும் பிணியுண்டோ [வும்
ஆயுநூல் சொன்மருந்தே னுங்கு ... ...(ச)

குட்டங் குருநோய் கொடுங்கழிச்சல் முன்னுன
ஒட்டுநோ யாள ருடைபடுக்கை—தொட்ட
பொருளுணவு நீர்காற்றுத் தீண்டாமல் போற்றல்
தெருளுடைய முன்மருந்தாந் தேர் ... ...(ரு)

பிணியர் பிணிதீர்ப்பார் செய்கையும் போழ்தும்
உணவும் மருந்தாம்நே ரால்தால்—பிணியுற்ற
மூலமருந் தின்னவென முன்னைமறிந் தூண்வகையும்
காலமறிந் தாளல் கடன் ... ... ...(சா)

வாரத் திரண்டுமுறை மாசிலெண்ணெய் நீராட்டிக்
காரம் புகட்டியயல் காலையிலே—ஏரண்ட
நெய்யால் குடலழுக்கு நீக்கிக் குழவிகளை
நையாமல் போற்றல் நலம் ... ... ...(எ)

பிள்ளைக்குப் பால்தாய் பிணிவருத்துந் தின்பண்டங்
கொள்ளாமை நன்று குருநோய்வெப்—புள்ளாரும்
மந்தம் வயிற்றோட்டம் வன்கணைகள் வாராமல்
முந்தியே காத்தல் முறை... ... ...(அ)

கருவுற்ற மாதர் களுக்கைந்தாந் திங்கள்
பெருகு மதவம் பிழிதல்—வருபிணிகள்
சேய்கட் கணுகாமல் தேர்ந்த மருந்துசெயல்
தாய்கட்கு மின்பந் தரும். ... ... ...(கூ)

பகலி லுறங்கல் பசியாம லுண்டல்
மிகவே யிரவில் விழித்தல்—மிகவே
பசித்திருத்தல் மாறுறுதின் பண்டங்க ளுண்டல்
நசிக்குநோய் வித்தாகும் நாடு ... ... ...(௰)

௰௩-ம் அதிகாரம்—மக்கட்போற்றல்.

ஈன்றோர் தவமு மறிவு மிசைநடையும்
வான்றோய் குடியுமாம் மற்றிவற்றைச்—சான்றாகி
மக்களறி விப்ப ருலகறிய வாழ்வாரைத்
தக்கவழிப் போற்றல் தலை ... ... ...(௧)

வைகறையில் பாலர் தமையெழுப்பி வாய்முகங்கால்
கைகழுவித் தெய்வங் கருதுவித்து—மெய்கவின் செய்
தூண்ண வுணவுகொடுத் தோதுங் கழகத்தில்
நண்ணக் கலைபயிற்றல் நன்று.... ... ...(௨)

மெய்யி லழுக்கடைந்தால் வெப்புஞ் சொரிசிரங்கும்
வெய்ய பிணியனைத்தும் மேவுமால்—எய்யாமல்
காலையினும் மாலையினும நீராட்டிக் கண்கவினக்
கோலஞ்செய் வாய்சிறுவர்க் கு... ... ...(௩)

மெய்குலைய அச்சுறுத்தி உள்ளம் மெலிக்காமல்
செய்கையினை யின்சொல்லால்சீர்திருத்தி-மெய்கவின்
மாதினியாய் கட்டுரைத்து மன்னும் மனவலியும்[சேர்
தீதிலறி வும்வளரச் செய் ... ... ...(௪)

பெண்மக்கட் கைந்துமுத லேழீறும் பேதையிலே
எண்ணுங் கலைபயிற்றி யேழின்மேல்—உண்ணும்
பொருளுணர்வுஞ் செய்தொழிலும் பொற்பமைந்த
தெருளுறுத்துப் போற்றல் சிறப்பு... (௫) [கற்புந்

தாய்மகட்குச் செய்நன்றி தான்கல்வி கற்பித்துத்
தூய்மனையின் நல்லொழுக்கந் தோற்றுவித்துத்-தோய்
உள்ளத்தும் மாத ருயர்தந் தலைமீதும் [கணவன்
கொள்ளச்செய் வித்தல் குறி... ... ... (சு)

மக்களே தஞ்செல்வம் மாசில் குலத்துக்கு
மக்களே மல்கு கொழுந்தாவர்—மக்களே
தம்மின் புருவானோ ரானக்கால் தாமவரைச்
செம்மைசெயா ரோபெற்றோர் செப்பு... ...(எ)

பொய்குறளை வன்சொல் புகலா திளையோரை
மெய்கலந்த இன்சொல் விழைந்துரைக்கச்—செய்கந
நன்றன்றித் தீமை யிளமைக்கண் நண்ணியக்கால்[லாய்
பொன்றளவும் தீராநோய் போன்ம்... ...(அ)

பெற்றோர் குணமொழுக்கம் பிள்ளைகளா லேவெளி
உற்றே மனைக்குள் ஒளித்தாலும்—நற்றோகாய் [யாம்
ஓங்கும் பழுமரத்து ளூற்றகுண மம்மரத்தில்
ஆங்கனியா லேவெளிப்பா டாம்... ... ...(கூ)

நல்லொழுக்க மில்லாத மக்கள் நடக்கையால்
தொல்குலமும் மாட்சி தொலைந்துகெடும்--வல்லோங்
வேயுள் வெளிப்பட்ட வெந்தீயால் சூழெல்லாம் [கல்
மாயும் வளர்ந்தீய்ந்து மன்... ... ...(ய)

## சா-வது-தெரிவை யியல்.

யசு-ம் அதிகாரம் சுற்றந்தழீஇ விருந்தோம்பல்

வற்றா வளமும் மகிழ்வுஞ் சுகவாழ்வும்
சுற்றத்தா லோங்கித் துலங்குமே—கற்றாய்கேள்
நீரும் எருவும் நிறையப் பயிர்மல்கிச்
சேரும் பயனெய்துஞ் சீர்த்து... ... ... (க)

சுற்றத்தார் சூழ்ந்து மகிழ்தல் தொகுசெல்வம்
பெற்றத்தால் பெற்ற பெரும்பயனும்—முற்றுநிரைப்
பல்லதர மண்ணாந் தழுவித்தின் பண்டத்தின்
நல்விரதங் கொள்ளுநமே நா... ... ... (உ)

விளையும் பராரைமர மேலுறுப்பா யோங்கும்
கிளையன்னார் மக்கட் கிளைஞர்—கிளைநீங்கில்
குற்றியா மம்மரந்தான் கூடுங் கிளையின்றேல்
மற்றியா தாவர்வாழ் வார்... ... ... ...(௩)

காக்கை யினத்தை யழைத்துக் கலந்துண்ணும்
ஆக்கமுள நல்லா ரதுபோல—நீக்கரிய
சுற்றங்கள் சூழ்ந்து மகிழ்ந்துணத்தாந் துய்ப்பசிறு
குற்றங்கொள் ளாரன்பு கூர்ந்து... ... (௪)

குற்றத்தின் மிக்க குணநாடிக் கொள்வதன்றிக்
குற்றத்தை யேகாணில் சுற்றமிலை—பற்றுறுகைநல்
நாவைக் கறித்திடினும் நல்விரல்கண் குத்திடினும்
பாவை களையப் படா... ... ... ... (௫)

கிளர்ச்சி வளங்கண்டு கேடுள்ளும் நோனார்
தளர்ச்சிகண் டால்நகுஞ்சீர் சாலார்—வளர்ச்சிப்
பிணக்கர் புறத்தே பிழைபுகல்வா ரின்னோர்
தணக்கத் தகுஞ்சுற்றத் தார் ... ... ...(௬)

வந்த விருந்து புறத்திருப்பத் தாமுண்ணும்
நந்தா மருந்தும் நயப்பதன்றாம்—வந்த
விருந்தோம்பித் தாமுண்ணும் வேள்வியரைத் தேவர்
விருந்தோம்பப் பார்த்திருப்பார் மேல்... ... (௭)

துறந்தோர் கலையுணர்ந்தோர் சுற்றமற்றோர் நோயர்
இறந்தோர் நிரப்போ ரிரப்போர்—சிறந்ததாய்
தந்தையற்ற பாலரொடு மின்னோர் தமக்குதவி
சிந்தையுற்றுச் செய்தல் சிறப்பு... ... ...(அ)
அன்பகத்தி லுண்டாயி னூர்வமதி லுண்டாகும்
பின்பதிலே வண்மை பிறக்குமே—என்புகல்வ
தீகையா லிம்மை மறுமை யிரண்டிடத்தும்
தேசகையே யின்பந் தொகும்... ... ...(கூ)
சுற்றத்தார் சூழாம லேதிலார் சூழ்வாழ்வு
வற்றியகள் ளாற்றில் பயிர்போலும்—அற்ற
மிடியருக் கின்றி மிகையுடையார்க் கீதல்
கொடையன் றெதிர்க்கடனு கும். ... ...(ய)

## எ-வது-பேரிளம் பெண்ணியல்.

### யரு-ம் அதிகாரம்—மக்கண்மணவினை

மணமே யுலகம் வருதற்கு மூலம்
மணமே யனைத்துயிர்க்கும் வாழ்வு—மணமேநல்
இன்பம் விளைவித் திதனி னுயிர்க்குறுதி
என்புகல்வ திவ்வுலகத் தே ... ... (க)
அறமு மரும்பொருளு மாருயிர்க ளின்பம்
பெறவுரிய சாதனமாம் பேண—லுறுமின்பந்
தோற்றி வளர்நிலமாந் தூயமண மதனின்
ஏற்றப் பயனுயிர்கட் கில். ... ... ...(உ)
நன்னிலத்தி லேபருவம் நாடிநல் வித்திட்டுத்
தின்னும் பயன்மலியச் செய்வதுபோல்—அன்னாய்
பருவத்தே மக்களுக்குப் பண்புமணஞ் செய்து
பெருகச்செய் வாய்குலத்தைப் பின்... ... (ங)

மங்கைப் பருவத்துக் கன்னிதனை மைந்தன்தான்
சங்கையிலாண் டோரிருபான் சார்ந்ததன்மேல்—து
மணமருவச் செய்யிலவர் வல்லராய் வாழ்வர் [ங்க
குணமருவி மல்குங் குடி... ... ... (௪)

மணமுவந்த மங்கையும் வன்மைந்த னுந்தங்
குணமுவந்து நன்மணத்தில் கூடுங்—துணைவாழ்வு
வித்தகநல் லாசானும் வேகமதி மாணவனும்
தத்துவநூ லாய்தல் தகும்... ... ...(௫)

மைந்தன்மே லாமன்பை மைந்த னுயிர்த்துணையாய்
வந்த மருமகண்மே லும்வைத்து—முந்திருகண்
பெற்றமுகம் போன்மலர்ந்து பெற்றமகள் போல்ம
நற்றாய்போல் வாள்மாமி நாடு ...(௬) [கிழ்ந்து

பெண்ணணங்கா ணைச்சீர்ப் பெதும்பை கடந்துமணம்
உண்ணயக்கும் மங்கை யுயர்பதத்தில்—வண்ணயச்சீர்
மாப்பிள்ளைகட் கன்பாய் மணம்புரிந்து நல்கியவர்
காப்பியலச் செய்தல் கடன் ... ... ... (௭)

இன்றிருந்தோர்நாளை யிருப்பதையமென் றுணர்ந்தும்
ஒன்றாச் சிறார்மணத்தி லொன்றுவித்தாங்-கொன்றாச்
சிறுமியரைக் கைம்மையராய்ச் சீருலகவாழ்க்கை
வறுமையரா கச்செயலோ மாண்பு... ... ...(௮)
பிள்ளைமையில் செல்வமணம்பெற்றிழந்துபெண்கடுய
ருள்ளழிவார் பெற்றோர்செய் யுங்கொடுமை—உள்ளில்
பிறந்திருந்த வப்பெண்கள் பெற்றவிடத் தன்றே
இறந்திருந்தால் துன்பமில்லை யே... ... (௯)

மங்கலப்பொன் நாணிழந்தமங்கைதனைக் கற்புநெறித்
துங்கமண நாண்பின்னுஞ் சூட்டாதார் — மங்கைப்
பருவமுற்ற பின்புமணம் பண்பமையச் செய்தல்
கருமமுற்றக் கற்றாய் கருது... ... ... (௰)

## ௰௬-ம் அதிகாரம்—நோன்பு.

மாதருக்கு நோன்பு மணவாளன் தன்கருத்தில்
பேதமின்றி யன்பு பெறவொழுகல்—மாதர்
உடலன்னர் கொண்கர்க் குயிரின் வழியே
விடலின்றிச் செல்லுமே மெய்... ... ...(க)

கொண்கன் கருத்துக்கிசைந்தறங்கள் கோடாமல்[கள்
கண்களிரண் டொன்றியொன்றைக்காண்பதுபோல்—பெண்
மனஞ்செய்கை சொல்மூன்றும் மாண்டொன்றிச்
வனஞ்சென்று செய்தவமேன் மற்று (உ) [செய்யின்

கொழுநனுயிராகக்கொள்ளுடம்பாம்நல்லாய்[னைப்பின்
தொழுதெய்வம் வேறுனக்கேன்சொல்லாய்—கொழுந
கூடுமறத் தின்பயனுள் கூறொன்றுனதன்றோ
தேடுபொருள் நீதுய்த்தல் தேர்... ... ... (௩)

தீர்த்தங்க ளாடல் திருவிழாச் சேவித்தல்
மூர்த்திகளைப் பூசித்தல் முன்னுபயன்—சீர்த்தநாள்
நோன்புமுத லின்னவெலாம் நுன்கணவனேவலினால்
தேன்பொலிந்த பூங்குழலாய் செய்... ... ... (௪)

கற்ற கொழுநன் கருத்துக்கு மாறாகப்
பெற்ற செபதபங்கள் பேரறங்கள்—முற்றும்
பயன்றரா வாகலினால் பாவாயுன் கொண்கன்
நயந்தநெறி யேயொழுகல் நன்று... ... (௫)

அறப்பயனை யெல்லாம் அருமனையில் முற்றிப்
பிறப்பறுக்கும் நற்றவத்தைப் பேணித்-துறப்புற்றுக்
காட்டிலுறை நாயகனைக் காப்பா ளுயரின்ப
வீட்டிலுறை வாளெவர்க்கும் மேல்... ... ...(௬)

உருவும் நிழலும்போ லுற்ற கொழுநன்
மருவிப் பிரியாத மாதர்—பிரிவே
துடம்புதான் செல்லு முழியெல்லாம் பற்றித்
தொடர்ந்துநிழல் செல்லாதோ சொல்... ...(௭)

உடல்கொண்ட நல்லுயிர்போ லுன்னைக்கொண்டானை
விடலுண்டோ வெந்துயருற் றாலும்—விடலில்லான்
நீத்தபொழு தத்திலுயிர் நீத்தவுடல் போற்சுகத்தை
நீத்துநோற் பாய்நல்லாய் நீ... ... ......(௮)

அன்பன் பிரிந்த அருங்கற்பின் மாதரார்
தன்பொற்பணியாடைசார்சுவையூண்-இன்புறுத்தும்
பாயலின்ன கொள்ளாமல் பாங்கனனை யுங்காறும்
தூயநெஞ்சால் நோற்பாள் துணிந்து... ...(௯)

எம்மதத்தோ ருங்கணவர் நீங்கா திருப்பதற்கே
சம்மதத்தோ ராதலினால் தையலர்கள்—தம்மதந்தான்
தம்மையுங் காத்துத் தவஞ்செய்கை தங்கணவர்
எம்மையுஞ் சேர்ந்திருக்க என்று... ... ...(௰)

## ௮-வது—ஒழிபியல்.

### ௰௭-ம் அதிகாரம்—மகிழாட்டு.

பண்ணை விளையாடல் பாவை விளையாடல்
கண்ணைப் பொதிதல் கழங்காடல்—வண்ணச்சில்
எற்றல் கதைநொடிசொல் இன்னவெலாம் பேதையர்
கற்றொழிந்த போதுசெய் கை (௧)... ...[கள்

கும்மி யடித்தலிணைக் கோல்கொண் டடித்தாடல்
அம்மனைபந் தாட லணிவகுத்தல்—தம்மில்
கரம்பற்றிச் சூழல் கவினுர் பெதும்பை
நிரம்பிய மங்கையர்க்கும் நேர்... ... ...(உ)

மல்லிகை முல்லை வளர்த்த லவைமல்கி
மெல்லரும் பீன விழாச்செய்தல்—நல்லவியல்
துங்கவெழில் பாவைக்குச் சூழ்கலியா ணஞ்செய்தல்
மங்கையர்த மாடன் மகிழ்வு ... ...(ங)

தஞ்சொல் பயிற்றியவைதாஞ்சொல்லக்கேட்டுமகிழ்ந்
தஞ்சுகத்தைப் பைங்கிளியை யன்பாகப்-பஞ்சரத்தில்
சேர்த்துவளர்ப் பாரேர் திகழுங் கலாபமயில்
ஆர்த்துவளர்த் தாடலுவப் பார் ... ...(ச)

பாயும் பிணைமானும் பஞ்சேர் மயிர்த்தீவின்
நாயும் வளர்த்தவற்றி னுல்மகிழ்வார்—தூயபொறிச்
சிட்டினமும் வெண்சிறிய தீவெலியும் சக்கரக்கூட்
டிட்டாடத் தாமுவப்ப ரே ... ... ...(ரு)

வீணையேந் தித்தந்தி மெல்விரலி னுல்நடத்திப்
பாணனைத்துந் தோன்றப் பலசுரங்கள்—மாண
இசையெழுப்பிக் கேட்போரை யின்பத்துள் மூழ்க
நசையெழுப்பித் தாமுவப்பார் நன்கு ... (சு)

வண்ணநல் யாழிசைத்து மன்னேந் தினைக்குரிய
பண்ணுமி ராகப் பலவிகற்பும்—வண்ணவிசைச்
சிந்துமமிழ் தில்தேனில் தித்திக்கப் பாடுவார்
விந்தைமிகு நல்லார் வியந்து ... ... (எ)

மங்கல வள்ளை மணவாழ்த்துத் தாலாட்டு
மங்கள மூசல் மகிழேசல்—துங்கப்
பலசந்தப் பாமாலை பண்ணுபல செய்யுள்
நலசந்தத் தால் படிப்பர் நன்கு... ... ...(அ)

பூம்புனலி லாடுவார் பொற்பார் மணமலர்கள்
தேம்பொழிலில் கொய்வார் சிகழிகையாத்—தாம்புனை
சூடுவார் சோலையுனுத் தூயனவுண் பார்மலர்பந்[ந்து
தாடுவார் மங்கைநல்லா ராங்கு ... ...(கூ)

மங்கை மடந்தை மடவார் மணமாட்சித்
தங்கணவ ரோடுமவர் தங்குறிப்பால்—பொங்கும்
மகிழாடல் செய்து மனங்களிக்கச் செய்வார்
புகழாரு மின்பம் புரிந்து ... ... ... (ய)

யஅ-ம் அதிகாரம்—பொழுது போக்கு.

அரிவை தெரிவையரா மங்கையா ரில்லில்
உரிய தொழில்செய் தொழிந்தால்—வருபொழுது
போக்குதற் காகப் புகழறிவு பொற்பின்ப
மாக்குநற் செய்கைபுரி வார் ... ... ...(க)

தந்தமருஞ்செல்வியர்க்குச்சான்றபொருள்வாசகமும்
செந்தமிழில்பெண்மைநெறிச்செய்யுளுஞ்சீர்-முந்தும்
இலக்கணமு மெண்ணு மிசையுமின்ன நூலும்
அலக்கணறக் கற்பிப்பா ராய்ந்து ... ...(உ)

பூந்துகிலி லொண்பட்டில் பொன்புனைபூம் பாவாடை
எந்துமணிப் பொற்கச் சிசைசட்டை—ஆய்ந்தமணி
மேகலைக ளின்னபுனை மிக்கதொழில் கற்பிப்பார்
பாகலையின் சொல்லார் பரிந்து. ... ...(ந)

வேந்தர் புகழெனவை வேந்துமனை சூடாலை
ஆய்ந்த புகழ்க்காரை யம்மைமுதல்—வாய்ந்தமெய்ஞ்
ஞானியர்தங் காதைகளைப் பாராட்டி நன்குவப்பார்
தேனியன்ற சொல்லார் தெரிந்து... ... ...(௪)

திருந்துபுகழ் வள்ளுவனார் தேவி குணமும்
அருந்ததிந ளாயினிகற் பாறும்—வருந்தியசீர்ச்
சீதை திறமும் தமயந்தி செய்கையுமற்
றோதிக் கடைப்பிடிப்பா ரோர்ந்து... ...(௫)

அட்டேண் வகைசொல் லருநூல் மனைவாழ்க்கைச்
செட்டுநூல் நீதிநூல் சிந்திப்பார்—தொட்ட
சமயநூ லோதியதிற் சார்பொருளைத் தேர்வார்
அமைநே ரமைதோளி னார்... ... ...(௬)

வேறுபல தேயத்தும் மேவியகற் பங்கனையார்
வீறுபயி லுஞ்சரிதை வித்தைவல்லோர்—கூறுவன
கேட்டு மனமகிழ்வார் கேளிர்க் குறுமுதவி
கூட்டுஞ் செயல்புரிவார் கூர்ந்து. ... ...(௭)

எத்தலத்து மெந்நாட்டு மெத்தீவி னும்புதுமை
நித்தச் செயலின் நிலையுணர்த்தும்—பத்திரிகை
வாசித்துத் தாமுணர்வார் வாசியா மாதருக்கும்
நேசித்துச் சொல்வார் நிலை. ... ... ...(அ)

சதுரங்கஞ் சொற்கட்டான் தம்மொத்தா ரோடே
எதிரங்க மாப்பொருவா ரின்ப—மதுரங்கொள்
பண்ணமைய யாழிசைத்துப் பாடுவார் சிந்துபல
வண்ணமுக மாதர் மகிழ்ந்து. ... ... ...(௯)

சுற்றத்தார் நட்பினோர் சூழ்ந்திருக்க வீற்றிருந்து
கற்றத்தா லாம்பயனைக் கட்டுரைப்பார்—சுற்றும்
நிலமுதலா மைம்பூத பௌதியமாய் நிற்கும்
உலகியல்நூ லோதியுணைப் பார்... ... ...(ய)

## யகூ-ம் அதிகாரம்—உலகியலுணர்வு

மண்ணுநீ ருந்தீயும் வானும் வளியுமிவை
எண்ணுமைம் பூதங்க ளென்பரால்—பெண்ணணங்கே
ஓதியபூ தக்கலப்பா லுண்டாம் பொருளனைத்தும்
பூதியமென் றூர்காண் புரிந்து... ... ...(க)

பத்து மடங்குநீர் பாரோர் மடங்கதுவே
உய்த்துத் தெரிகண்ட மோரைந்தும்—தத்துநீர்த்
தீவுபல வும்மாகுந் தேரவற்றுள் ளேவிண்ணில்
தாவுபல வெற்பாறு சார்ந்து... ... ...(உ)

ஓருமுயி ருள்ளளவு மில்லளவு மாமுணரில்
நீரினெடும் பாரில் நிறைபொருள்கள்—தேருயிர்கள்
வித்தில் கருப்பையில் வேர்வையினில்முட்டையினில்
நத்திப் பிறப்புவகை நான்கு ... ...(ங)

தேருமுயர் மானிடவர் தேவர் விலங்கொடுபுள்
ஊருவன புல்முதல வுற்றென்றும்—நீருறைவ
என்றேழ் வகையென்ப வெல்லா வுயிர்ப்பொருளும்
ஒன்றொன்றிற் பல்பேத மோர் ... ...(ச)

மெய்வாய்கண் மூக்குச் செவியிவைகள் மெய்ப்பொ
ஐவாயில் மேவும் புலனைந்தாம்—ஒவ்வாச [றியிவ்
சிலகுறைந்த சீவிகளு முண்டென்பர் தேர்ந்தோர்
இலகுமன முட்புலனு மே ... ...(ரு)

செங்கதிரா லிந்துவொடு சேணு ருடுவினமும்
அங்கதிராத் தோன்று மகல்நிலமும்—துங்கவொளி
எய்துமிரு நீராவி யாவெழுந்து மேற்சென்று
பெய்துமழை யாம்பனியாம் பின் ... ...(௬)

அலருங்கதிரா லளவில் பொருள்கள்
மலருங் குவியும் வளரும்—இலகும்
உருகும் மிருகு முதிக்கு மழியும்
பெருகுஞ் சுருங்கும் பெயர்ந்து ... ...(௭)

மண்ணுநீ ருந்தீயும் வாதமும் பேதமாய்
எண்ணும்பலபொருளா யெய்துதலால்-பெண்மணியே
அப்பொருள்க ளப்பொருளா லாகிப் பெருகிநின்று
செப்புமுன்னே மாறுந் தெரி ... ...(௮)

அணுவில் சிறிதில்லை யண்டம் பெரிதே
அணுகம் பலவா மவைபல்—குணவியல்பால்
கூடிப் பலபொருளாங் கூடியவா றேபிரியும்.
நாடிநீ நூலிலறி நன்கு ... ... .. (௯)

பொருளுங் குணமும் பொழுதுஞ் செயலும்
மருவும் நிலமுமாய் மல்கும்—பெருவுலகம்
இத்தனைக்கு மாதியறி வென்னுமே மன்னுலக
தத்துவநூ லுய்த்தறிநீ தான்... ... ...(௰)

## ௨௰-ம்-அதிகாரம்—கைம்மையர் கொள்கை

மணவாளன் முன்னிறந்த மாதர் பிறிதோர்
குணவாள னைமணத்தல் கொள்கை—மணநயவார்
பின்னை யிறந்த தலைவற் பெறநோற்றல்
தன்னை யறிதல் தலை ... ... ...(௧)

யாதுநா னேனெனக்கு முதலேது
யாதுகா ணிவ்வுடன்மற் றிவ்வுலகென்—ஓதுமுடி
வென்னென்று நூலுணர்வா லேற்ப வறிதலே
தன்னுணர்த லாகுந் தனி ... ...(உ)

கற்பனையா மின்பதுன்பங் காயமா காயவில்லாம்
சொற்பனமாம் வாழ்வுலகத் தோற்றங்கள்—நிற்பில்
உருவெளித் தோற்றமா மென்றே யுணர்தல்
மருளறு மெய்புணர்வின் மாண்பு ... ...(ங)

புறந்தூய்மை செய்து புலனடக்கி யுள்ளே
மறஞ்சேர் பகையனைத்தும் மாய்த்துத்—திறஞ்சேரும்
பற்றற்ற கந்தூய்மை பான்மையுறும் நல்லாரைப்
பிற்றொற்று தாகும் பிறப்பு ... ... (ச)

பல்சமய நூலும் படித்துப் பயனுணர்ந்து
கல்வியில்லா மாதருக்குக் கற்பித்தல்—வல்லரசர்
சட்டமனு நீதிநூல் தாமுணர்ந்து கல்லார்க்குக்
கட்டுரைத்தல் நல்லார் கடன் ... ...(ரு)

அழகுற்ற பெண்மக்க ளாயங்கள் கூட்டிக்
கழகத்தில் நல்லநூற் கல்வி—பழகுதொழில்
கற்பித்தல் வாழ்க்கைநெறி கட்டுரைத்தல் கொண்க
நற்பெண்கள் நற்செயலாம் நாடு... ...(சு) [ணில்லா

சிசுகிழவர் நோயரகஞ் சேர்ந்துவளர் புட்கள்
பசுவெருது நாய்முதல பண்பால்—நசைசேர்
விலங்குபசி யாலுமடர் வெந்நோயி னாலுங்
கலங்காமல் காத்தல் கடன். ... ... ...(எ)

தாம்பிறந்ததேயத்துத்தம்மையொத்தபெண்மையருக்
காம்பயன்செய் நற்செயல்க ளாற்றுவார்—தாம்பிறந்த
புக்ககுடி கண்மே லுயர்ந்து புகழ்பெருகத்
தக்கசெயல் செய்பநல்லார் தாம்... ... ...(அ)

·கிழவர் கருவுற்றோ ரீன்றோர் கிளைக்குங்
குழவி முதலெவர்கட் குந்தாம்—பழகியறி
நன்மருந்து செய்து பிணிதீர்க்கும் நல்லாளைப்
பொன்மருந்தாப் போற்றும் புவி. ... ...(கூ)

மக்கள் மருமக்கள் தம்மை வளப்படுத்தல்
பக்கக் கிளையாளைப் பாங்குறுத்தல்—மிக்கவழிப்
பேரர் தமைப்பேணல் தெய்வம் பெரிதிறைஞ்சிச்
சீருறுத லௌவை செயல்... ... ... ...(ய)

## பெண்மை நெறி விளக்கம்.

முற்றிற்று.

# அரும்பதப் பொருள்.

பெண்மை நெறி விளக்கம்=பெண்மக்களுக்கு உரிய ஒழுக்கங்களை விளங்கச்செய்யும் நூல்.

பெண்மை=பெண்தன்மையையுடையமக்கள், நெறி=ஒழுக்கம், விளக்கம்=விளக்குகிற நூல்.

பாயிரம்=நூலுக்கு (முகம்போல) முன்னிருக்கும்பகுதி.

முதலாம் அதிகாரம் கடவுள் வணக்கம்=இவ்வதிகாரம் கடவுளை வணங்குதலைச்சொல்லுவது.

அதிகாரம்=ஒருபொருளைச் சொல்லும் பலபாட்டின் கூட்டம்,

(க) உலகு=(இருப்பிடமாகிய) உலகத்தையும், இலகும்=விளங்கும், அறிவு இன்ஐ=அறிவை, நலம்மேவ=மோட்ச இன்பம் அடைய, சீலம்=நல்லொழுக்கம், பொருள்=மெய்ப்பொருள், உணரும்=அறியும், செல்வி=செல்வமகளே, [செவிலித்தாய் தலைமகளுக்குச் சொல்வது. நூல் முழுமையும் இப்படியே. செவிலித்தாய்=ஒழுக்கங் கற்பித்துப் பெண்ணை வளர்க்குந்தாய், தலைமகள்=எஜமாட்டி பெற்ற மகள்.] மூலப்பொருள்=உலகத்துக்குக்காரணமாகிய கடவுள்.

(உ) பூண=அணிய, கரம்=கை, மாண்இழையே=பெருமைபொருந்திய ஆபரணமணிந்தபெண்ணே, பகுத்து அறிய=(நன்மை தீமைகளைப்)பிரித்துஅறிவதற்கு,தேவு=கடவுள்.

(௩) இன்றி=இல்லாமல், தீம்கனி=இனிக்கும் பழம், சேஇழையே=செம்பொன்னாபரணமணிந்த பெண்ணே, இன்பு

உம்உண்மையால்=இன்பமும் இருப்பதனால், முதல் உண்டு= உலகத்துக்குத் தலைவன் இருக்கவேண்டும், அ இறை ஐ=அக் கடவுளை, போற்றாய்=வணங்குவாய்.

(௪) உண்டி=உண்ணும் பொருள், உற்றதொழில்=உரிய வேலை, மண்தலம்=பூமி, ஒண் தொடியே=ஒளியுள்ள வளையலணிந்தவளே, அருளில்=கிருபையால், முன்னவன்=கடவுள்.

(௫) புதுமையாக=அதிசயமாக, சித்திரித்து=அழகாக அமைத்து, தத்தை=கிளி (மொழிபோலும்), ஒழியாய்=நீக்குவாய்.

(௬) தேவு ஆய்=தெய்வமாகி, பரம்=மேலான, பாவாய்=பொற்பதுமைபோல் பவளே, சமயர்=மதவாதிகள், நாவாயால்=நாக்குள்ளவாயால், புலைநெறி=பொய்ச்சமயம், பேதியாது=(மனம்) வேறுபடாமல்.

(௭) மெய்=உண்மையான, காண்பது அன்றி=அறிவதே (பயன்) அல்லாமல், எய்தும்=அடையும், ஒண்பொருள்ஐ= ஒளியுருவாகிய கடவுளை.

(௮) நல்லாய்=நற்குணமுடையாளே, உலகு இயலை=உலகமாகிய பொருள்களின் இயற்கையை, நன்கு=நன்றாக, கூடி இசைத்து=சேர்ந்துஒலிக்கச்செய்து, தனிக்கும்=தனித்தும் ஒலிக்கும், எழுத்து அகரம்=அகரவெழுத்து, இசைந்து =(உயிர்களுக்கு உயிராய்ப்) பொருந்தி.

(௯) மேல்கீழ்=மேன்மைப்பொருள் கீழ்மைப்பொருள், பரு=பெரிய, நுண்=மிகச்சிறிய, பற்றான்=(பொருந்தியும்) பொருந்தான், ஓர் இடை=ஒரு இடம், செப்ப அரியன்=(மனத்தால் நினைத்து வாயால்)சொல்லக்கூடாதவன், ஓர் இடையாய்=அழகான இடையை யுடையவளே, இன்னோன்=இத்தன்மையுடையவனே.

(ய) இன்பந்தனக்கு வரம்பு இல்லான் = அளவில்லாத இன்பமுடையவன், முற்று அறிவன் = (உலகம்) முழுமையையும் அறிபவன், முழுவலியன் = எல்லாஞ் செய்ய வல்லவன், நாள் = ஆயுள், அறிவாய் = (மெய்ப்பொருளை) அறிபவனே, காண் = நீ ஆய்ந்துபார்.

உ-ம் அதிகாரம்

பெரியோரைப்பணிதல் = பெரியோரை வணங்குதலை சசொல்லுவது.

(க) தகை மொழி = பெருமையமைந்தசொல், மகவு = குழந்தையாக, ஆய் = தாய், அரிதுஈன்று = வருந்திப்பெற்று, நாட்டி = நிலைக்கவைத்து, ஒழுகல் = நடத்தல்.

(உ) தலைவன் = (தனது) நாயகனை, பேணி = விரும்பி, கருவுற்று = கருப்பங்கொண்டு, போற்றி = பாதுகாத்து, இகழாமல் = அவமதிக்காமல்.

(ங) முயன்று = செய்து, நந்தாத = கெடாத, செல்வமென = செல்வமாகக்கருதி, சிறப்புசெய்யும் = (கல்விமுதலிய) பெருமையை யுண்டாக்குகிற, சொல்வுஅரிது = சொல்லமுடியாது, நாளும் = எந்நாளும்.

(ச) நலம்பெருக = மகிழ்ச்சிமிக, புலம் = அறிவு.

(ரு) கணக்காயர் = உபாத்தியாயர், சேதனர் = அறிவுடையோர், பொற்புஉடையாய் = அழகுடையவளே.

(சா) வாழ்க்கைக்கு = இல்லறவாழ்வுக்கு, உறுதுணைஐ = உற்றதுணையாகிய நாயகனை, தலையளித்து = பாதுகாத்து, மா = பெருமையமைந்த.

(எ) இல்அறம் = வீட்டில் (கணவனுடனிருந்து செய்யும்) நற்செய்கை, சித்திப்பதற்குஉம் = (பயன்) கைகூடுதற்கும், நண்ணுதற்குஉம் = அடைவதற்கு உம், அறிவாய் = அறிவுடை

யானை, வாய்ந்து=(தனக்குப் புத்திரனாகப்) பெற்று, அளித்து=(உனக்குக்கணவனாகக்) கொடுத்து, காரணம் ஆம்=(சித்தித்தல் நண்ணுதல்களுக்கு) உதவி ஆகிய, வழுத்து=வாழ்த்துவாய.

(௪) பேதம்இன்றி=(வெறுப்பு) வேறுபாடு இல்லாமல், உள்ளம் ஒன்றி=மனம்(விருப்பம்)ஒத்து, காதலனை=ஆசையுடையோனை, கடிபுரிந்து=கலியாணஞ்செய்து, தீது அற்று=தீங்கில்லாமல், தாம் இயைந்து=நீங்கள்தாமே ஒருமைப்பட்டு, முதல் சாதனமாய்=முதல் காரணமாகி.

(௫) ஓங்க=உயர, நலம்மருவும்=நன்மைகலந்த, பலம் மருவ=இன்பங்கைகூட, இன்பபெருந்துணையை=இன்பம் (உண்டாவதற்கு) முக்கியதுணைவனாகிய நாயகனை, ஈன்றுஅளித்த=பெற்றுவளர்த்த.

(௬) துறந்து=(இல்லறத்தை)நீங்கி, தூ=பரிசுத்தமான, அறம்=தருமம், வல்லோர்=கற்றுவல்லோர, குடி=நல்லகுலம், வாய்மை=மெய்ச்சொல், கிழவர்=உரியபெரியோர்.

## முதலாவது-பேதை யியல்.

பேதை=(ஐந்துமுதல் ஏழுவரை வயதுள்ள)பேதைப்பருவப்பெண், இயல்=இயல்பு=கொள்கை. ௫, ௬, ௭, வயதுள்ளபெண்களின் கொள்கையைச் சொல்லும் பகுதி.

### ௧-ம் அதிகாரம்

கல்வி=நூல்களைக்கற்கவேண்டுதலைச் சொல்வது.

(௧) நல்உயிர்=நன்மையை அடையும் உயிர், தலைமை=முதன்மை, சிறப்பு செய்யும்=பெருமையைத்தரும்.

(௨) கற்பு=நாயகன் சொற்படி நடந்து தன்னைக்காத்தல, இசைவு=தக்கசெயல்கள், சொல்விக்கும்=கற்பிக்கும், மேன்மை=சிறப்பு, முத்திஎனும்=மோட்சமென்று சொல்லப்படுகிற, அந்நிலத்துக்கு=அவ்வுலகத்தில் சேருதற்கு.

(௩) செலவு=நடத்தல், உள்நின்ற=மனதினுள்தங்கிய, மறைச்சொல்=இரகசியச்சொல், பண்=இராகப்பயிற்சி, தொல்=பழமையாகிய, பன்னும்=சொல்லும், நிலை=நிலைமை.

(௪) காட்சி=பார்வையும் பார்க்கப்படும்பொருளும், கேள்வி=சத்தமறிதல், எண்=மனநினைவு, எண்ணில்=ஆலோசித்தால்.

(௫) அறத்தை=இல்லறஒழுக்கத்தையும், தலைஅளிக்கும்=முதன்மையாகக் காக்கும், நல்லார்க்கு=நல்லபெண்களுக்கு, நயனம்உறில்=கண்ணும்கிடைத்தால், பொல்லாதோ=கொடியதாகுமோ, வாள்=கத்தியாயுதம், வாட்டவல்ல=வதைக்கவலியனாகிய, வலிபோமோ=முன்னிருந்த பலமும்போய்விடுமோ.

(௬) மெல்இயல்=மென்மைத் தன்மையுள்ள பெண்ணினது, மெய்அழகு ஒன்றால்=உடம்பழகு ஒன்றை மாத்திரம் கண்டு, விழைவோர்=(மணம்) விரும்பும் ஆண்மக்கள், என்ஆவர்=எவ்வளவு அதியாசைப்படார், மேல்மேல் களித்து=மேலும் மேலும்மகிழ்ந்து, புனையாரோ=அணிந்துகொள்ளாரா, பொன்பூ=பொன்னால் செய்தமலர், மணம் கமழ்ந்தபோது=வாசம்பரிமளித்தால்.

(௭) மெய்எழில்=வடிவழகு, ஒளிர்=விளங்குகிற, மின்னாரை=மின்னல்போன்ற பெண்களை, கடி பொலியும்=வாசம்பொருந்தி விளங்குகிற, கற்பகம்=தேவலோகத்துக் கற்பகத்தரு, மாணிக்கம்=இரத்தினமே, மேல்=மேலெல்லாம்.

(௮) சூடாலை=சிகித்துவசராசன் மனைவி, காஞ்சனமாலை=மலையத்துவசபாண்டியன் மனைவி, ஒளவியம்=மனக்குறை,மங்கைக்கரசி=கூன்பாண்டியன் மனைவி, திவ்விய=பரிசுத்தமுள்ள, ஆன்ற=நிலையான.

(௯) காதல் தருபண்=ஆசைவிளைக்குஞ்சங்கீதநூல், பிணக்கு இல்=வெறுப்பில்லாத, மருத்துவம்=வயித்தியநூல்,

பேதத்துஉணர்ச்சிதரும்=பலபேதமாகிய அறிவைத்தருகிற, சிற்பம்=சிற்பசாத்திரம், தேருங்கால்=ஆராய்ந்து பார்க்கில், ஐம்புலன் ஆம்=(மெய் வாய் கண் மூக்கு செவிகளிலுள்ள) ஐந்தறிவையும் போலாகும்.

(ம) இலைகிள்ளல்= (சித்திரவேலைசெய்ய) இலைகளை நறுக்குதல், அமைய=பொருந்த, யாழ்=வீணை, உரு=உருவஞ்செய்தல். சித்திரம்=வண்ணச்சித்திர மெழுதல், பூண்=ஆபரணஞ் செய்தல், தண்=குளிர்ந்த, சுதை=சுண்ணாம்பினால்உருவம் முதலியனசெய்தல்.

## உ-வது பெதும்பை யியல்

பெதும்பைப பருவப் பெண்களின் கொள்கையைச சொல்லும்பகுதி. பெதும்பை=அ, கூ, ம, மக, வயதுப்பெண்கள்

---

### சஃம் அதிகாரம்

உண்பொருளுணர்ச்சி=உண்ணுதற்குரிய பொருள்களை அறிதலைச் சொல்லுவது.

(க) அளாவி=கலந்து, புளிந்தாளிதம் =சித்திரான்னம், பாளிதம்=பாற்சோறு, பல்லசுவை=பலவகை உருசியுள்ள, அப்பம்=தோசைமுதலியன, அவி=வேடுகட்டிச் சமைக்கும் பலகாரங்கள், செப்பு=(சமையல்விதம்)சொல்லுகிற, அடுசில்நூல்=சமையல்நூல்.

(உ) நுண்=மெல்லிய, பலஆம்=பலவிதமான, மோதகம் =இனிப்படை முதலியன, கூழ்=அலுவா, பண்புஆக=சுவைஉண்டாக.

(ங) பண்ணிகாரம் = அடைமுதலிய பலகாரம், எண்ணி =ஆலோசித்து.

(௪) வெம்பும் = (பாலில்லாமல்) மெலிகிற, அம் புவி இல் = அழகிய பூமியில், நீள் அம்கண்ணாய் = நீண்ட அழகியகண்களையுடையாளே.

(௫) ஐவனம் = மலைநெல், கானில்குன்றில் = காட்டிலும் மலையிலும், விரவிய = கலந்த.

(௬) ஆதி = முதலாகிய, முற்கம் = காய்த்தானியம், கடன் = தகுதி.

(௭) கேடுஇல் = கெடுதியில்லாத, உணவாய் = உண்ணும் பொருளாய், வழங்கும் = உபயோகப்படுகிற, வகுத்து = திருத்தி முறைசெய்த.

(௮) சுவைஆம் = உருசிப்பொருள்களாம், ஒப்ப = சமப்பட, நளபாகம் = நளராசன் செய்த சமையல்.

(௯) கார்அடகு = கருவேப்பிலை, சம்பாரம் = மசாலைச்சரக்குகள், ஆன்நெய் = பசுநெய், மானனோ = மான் கண்ணையொத்த, மதி = அறிவாய்.

(௰) வைப்பு = சேர்ப்பு, முப்பால் = மூன்றுவகைப்பட்ட, அடிசில் = (குழம்புசாறு இரசம் ஆகிய) சமையற் பொருள்கள், உரிபொருள் = உரியபொருள், வடு = குற்றம், வளம் = (செய்கைச்) செல்வம்.

௫-ம் அதிகாரம்

செய்தொழில் = செய்துபழகவேண்டிய செயல்கள்.

(௧) அட்டில் = சமையல்வீடு, அடுகலங்கள் = சமையல்பாத்திரங்கள், ஆதி = முதலாகிய, கருவிகள் = (சமையலுக்குத் துணையாகிய) தட்டு முட்டுகள், கட்டுஇல் = வகுப்பானவீடு, நவை = குற்றம், ஆளும் செயல் = உபயோகப்படுத்துஞ்செய்கை.

(௨) தொகை = கூட்டம், இன்ன = இவைபோன்ற உண்பண்டங்களும், மடவார் = பெண்கள்.

(ங) தீம்பு ஆர் = சுவைபொருந்திய, தேன்வைப்பு அடை = சிலேபி, பூமுருக்கு = பூப்போலச்செய்தமுருக்கு, ஏர் = அழகிய, அணிபூண் = ஆபரணமணிந்த, இயல் = செய்கை.

(ச) பண்உம் = இராகமும், மணம் ஆர்வழுத்து உம் = கலியாணத்துக்குரிய வாழுத்துப்பாட்டும், தீட்ட = எழுத, இனிது = இன்பந்தருஞ் செயல்.

(ரு) அசோகம் நனை = அசோகமரத்தின் தளிர், மாதவி = குருக்கத்திமரம், படலி = பாதிரி மரம், நாகம் = புன்னை, தேமாறு = தேமா மரத்தின் அழகிய, நறுக்கி = கத்தரித்து, கோலம் புனைய = சித்திரம் அலங்கரிக்க, பாவை = பொறபதுமை போல்பவளே.

(சா) மகிழ = மகிழம்பூ, தொடை = தொடுத்தசரம், மாலை = கோத்தமாலை, தார் = ஆரம்.

(எ) பல் நிறம் = பலநிறமுள்ள, பூந்துகில் = அழகிய நாடைவை, மெல = மெல்லிய, கச்சு = இரவிக்கை, அங்கி-சட்டை, மேகலைகள் = முனைமுனைகள், பொன ஒன் இழை = சரிகை, டை = செய்யும் முறை.

(அ) முதல = முதலாகிய, ஒத்த இனம் = ஒன்றுக்கொன்று பொருத்தமான சாதி, ஒளிர பிரகாசிக்கின்ற, கொத்து = குசம், வடம் = சரம், வாரம் = (உடைகளின்)கரைக்கட்டு, தலைக்கோலம் = தலையலங்காரம், வள்ளுதம்பை = வளப்பம் பொருந்தியகாதணி, மேகலாபாரம் = முனைமுனை.

(கூ) சிப்பி = முத்துச்சிப்பிச்சில் பொடி, பளிங்கு = பளிங்குகல்பொடி, சாலிஅரிமா = சம்பாஅரிசிமா, சிந்தூரம் = சிந்தூரமரத்தூள், குளிர் = குளிர்ந்த, பச்சை = பச்சிலைப்பொடி, சாலை = பட்டவசாலை, மணம்காவணம் = கலியாணகூடம், சீர்சான்ற = சிறப்புநிறைந்த, அணிவாள் = கோலஞ்செய்து அலங்கரிப்பவளே.

(ய) பூமை = பூங்கருப்பு, வர்த்திகள் = ரேக்குகள், மா

= பெருமையுள்ள, தலத்தில் = சுவர்முதலியஇடங்களில், காண் = பார்ப்பதற்குரிய, பண்ஆரும் = செப்பம்அமைந்த, சிற்பப்படி = சிற்பநூலில்சொல்லியவிதமாக.

## ௫-வது—மங்கை யியல்.

மங்கை = (௰௨, ௰௩ வயதுள்ள, தன்னையறிந்த) மங்கைப்பருவப்பெண்கள், இயல் = கொள்கை.

### ௬-ம் அதிகாரம்

பொருள் தூய்மை = பொருள்களைச்சுத்தஞ்செய்தல்.

(௧) புல் அலகு = புல் துடைப்பம், உலர = விரைந்து காயும்படி, விரைந்து = உலருமுன்னே.

(௨) பலபண்டம் உறும் = பலவகைப் பதார்த்தங்களிருப்பதற்குரிய, நீர் கொண்டு = நீரினால், சவி = ஒளி.

(௩) கவின் ஆர் = அழகுபொருந்திய, இல் = வீட்டிலுள்ள, மாசு அகல = பற்று அழுக்குப்போக, வளம்படுத்தல் = சுத்தஞ்செய்தல், தேசு அமைந்த = அழகு தங்கிய.

(௪) ஆய் = ஆராய்ந்த, அவ்வுறையை = அவற்றின் உறைகளை, தூய்து ஆக = வெண்மையாகும்படி, நீடு = நெடுங்காலம்.

(௫) உடுத்த உடை = தரித்திருந்த உடுப்புகள், ஊர் = தவழுகிற, எச்சம் = மலம், இன்பப்புகை = வாசப்புகை, நல்நலத்தர் = நல்லசுகமனுபவிப்பவர், நாகரிகர் = விவேகிகள்.

(௬) வாசமனை = குடியிருக்கும்வீடு, மாசு = தூசி, ஒட்டடை = நூலாம்படை, தேசு அடைய = பிரகாசம் பொருந்த, வீசு = நாறுகின்ற, அற = இல்லாமற்போக, நீர்தூம்பு = ஜலதாரை, போற்றுவார் = பாதுகாப்போர்.

(௭) கட்டிவைத்த = சேர்த்துவைத்த, கோது அகற்றி = பயனற்றபொருள்களை நீக்கி, இட்டகலம் = தானியம்வைத்திருந்த

பாத்திரங்களை, மாறுஉறுத = குறைவுபடாத, மாண்பு = பெருமை.

(அ) விழு = பெருமைபொருந்திய, உறாது = அடையாமல், ஆளும் = (சுத்தமாகவைத்து)உபயோகப்படுத்தும், அறிவோர் = அறிவுடைய பெண்கள், யாங்கு அழிய = சீர்கெட, சீலம் = ஆசாரம்.

(௩) தூய்மைஉற = சுத்தமடைந்திருந்தால், தேவர் உணவு = தேவாமிர்தம், நூறு ஆண்டினும் = (மனுடர்க்கு ஆயுளாக வகுத்த) நூறுவருடத்தின் மேலும்.

(௪) தூயஅல்லா = அசுத்தமான, தோயா = நீரிலே தோய்க்காத, மாசு = அழுக்கு, தீய = கொடிய, பெற்றநாள் = ஆயுளோன், தணிவார் = கெடுவார்கள்.

## ௭-ம் அதிகாரம்

## தன்தூய்மை = தனது மெய் வாக்கு மனங்களில் குற்றமில்லாதிருத்தல்.

(௧) வடிவுதிருத்தி = உடம்பைத்திருத்தி அழகுசெய்து, உடைநீத்து = (உடுத்திருந்த) ஆடையைக்களைந்து, மடி = தோய்த்தபுடவை, பாலி = வணங்கித்துதித்து, விளக்குஞ்செய்வது = (பெருக்கிமெழுகி) விளங்கச்செய்வது.

(௨) கடி = விளக்கமுள்ள, ஏல = (சமயத்துக்கு) ஏற்க, நறும் சுண்ணம் = வாசமுள்ள திருமஞ்சனத் திரவியம், இன் அடிசில் = இனிய வுணவு.

(௩) உதயத்தில் இன்று எனும் = சூரிய உதயத்தில் முழுசவில்லை யானாலும், நெய்ஆடுதல் = எண்ணெய் தேய்த்து முழுகுதலும், அணிபுனைதல் = ஆபரணமணிந்து கொள்ளுதலும், சீர் = சிறப்பு.

(௪) அகத்துள் = வீட்டிலுள், நின்று அவியும் = (நெய்யுள்

ளமட்டும்)நின்று அவிந்துபோம், கைஆர் = விலையுயர்ந்த, மணிவிளக்கும் = இரத்தினதீபமும், காட்டாது = (இருளை நீக்கிப் பொருளைக்) காட்டாது, தோகைநல்லார் = மயில்போலுஞ்சாயலையுடையநல்லபெண்கள், இங்கு = இவ்விடத்தி லிருந்தே, எல்லாவுலகினுக்கும் = எல்லாவுலகங்களிலும்(விளங்கும்படி).

(௫) மிகைச்சொல் = அளவைக்கடந்து பேசுஞ்சொல், வீறு = அதிகரிக்கின்ற, நகை = பரிகாசமாகிய, வாய்மைஇல் = மெய்யில்லாத, இன்ன = இவைபோன்ற சொற்கள், மாட்சிமை = பெருமைதங்கிய, தூயமைஇல் = அசுத்தமான.

(௬) பொருள் ஆர் = நற்பொருள்நிறைந்த, கலை = நூல்களிலுள்ள, பொறை = பொறுமை, நயம் = பயனுள்ள, அருள் ஆரும் = கிருபைதங்கிய, இன் = இனிய, அறம் = தருமப்பயனுள்ள, தெருள் = கல்வித்தோச்சியுள்ள, ஆர் = அரிய, இன்னவையே = இத்தன்மையவாகிய சொற்களை, வழக்கு = (நாவில்) வழங்குஞ்சொற்கள்.

எ) தீகாமம் = தகாத ஆசை, சேராதவஞ்சம் = எவரையுஞ்சேரவிடாதவஞ்சகம், சினம் = கோபம், பிசுனம் = உலோபகுணம், நேரா = பொருந்தத்தகாத, முனனை = (இவை)முதலாகிய, புன்மை = இழிவான, உயர்வு = (மனப்) பரிசுத்தமாட்.

(அ) வண்மை = ஈகைக்குணம், அருள் உண்மை = கிருபையுடைமை, சிரத்தை = (நல்லொழுக்கத்தில்)பிரியம், நடுநிலைமை = பாரபட்சமின்மை, ஆனஇவை = ஆகிய இந்நற்குணங்கள், நவை = குற்றம்.

(கூ) நல்லநீரால் = நற்குணத்தால், உளம் = மனம், களங்கம் = குற்றம், ஒளிநீராம = ஒளித்தன்மையாய் விளங்கும், சொல்உண்மையால் = மெய்சொல்லுதலினால், மன் = மிக.

(ய) உணவுஒடு = உண்டியின்சுத்தத்துடன், இன்பம் = சுகம், கைஅகலா = விட்டு நீங்காதிருக்கும், சீர்த்தி தொகும் = புகழ் நிறையும், வாய்மை = (இது) சத்தியமே, இருசெல்வம் = பொருட்செல்வம் ஞானச்செல்வம்.

## அ-ம் அதிகாரம்

**மணம் மகன் = கலியாணஞ்செய்தற் குரியவனது, நல ம் = நன்மை.**

(க) குடிவழு = குலக்குற்றம், வடிவுஇல் = உருவத்தில், வளத்தான் = செல்வமுடையான், அடுதிறலான் = பகைவரைக் கொல்லும் வல்லமையுடையான், பொற்பு = அழகு, பல்நூல் புலமையான் = பலநூலுங்கற்ற அறிவுடையான், கொண்கனேல் = கணவனானால்.

(உ) நல்நூல் = நல்லசாத்திரங்களாகிய, நா வாய் இல் = நாக்குள்ள வாயினால் ஓதி (நாவாய்இல் = கப்பலைப்போல), பன்னும் = (நூல்களிற்) சொல்லுகின்ற, மன்அவையை = அரசன்சபைக்கு, சொல்வலிஉம் = பேசுந்திறமையும், ஆண்மை = ஆண்தன்மை, எஞ்சான் = குறைவில்லாதவன், கலைசிங்க ஏறு = கலையில்வல்ல ஆண்சிங்கம்(என்று சொல்லப்படுவான்).

(௩) கரி = யானை, பரி = குதிரை, ஊர்தல் = ஏறிச்செலுத்துதல், கதம் = கோபம், படை = காலாட்சேனை, நடத்தல் = சண்டைசெய்வித்தல், பொருபடை = போர்க்குரிய ஆயுதம், ஆளல் = போரிலுபயோகித்தல், புகல் = (இவைகளைக்) கற்பிக்கிற, நூல் = யுத்தசாத்திரம், தெருள் உடையான் = தேர்ச்சியுடையவன், சூரம் = சூரத்துவம், ஏர் = அழகு, தொல் = பழமையாகிய, வீரசிங்கம் ஆம் = இரணவீரசிங்கமென்று சொல்லப்படுவான்.

(ச) மணிஇனம் = நவரத்தினவகை, போத = நிரம்ப, நா அசைந்தால் = தனது நாவை அசைத்து ஒருசொற் சொன்னால், நாடு அசையும் = நாட்டிலுள்ளோர் (அச்சொற்படி) செய்தற்கேதுவாகிய, நல்லான் = நற்குணமுடையான், நரர்க்குள் குபேரன் = மானுடருக்குள்ளே குபேரன்(என்று சொல்லப்படுவான்.)

(ரு) நிதி = செல்வப்பொருள், வளம் = குணமிகுதி, ஐந்தரு

நேரும் = (இந்திரனுடைய) பஞ்சதருக்களின் கொடையை ஒத்த, ஆன்ற = நிலைபெற்ற, இநிலத்தில் = இப்பூமியில்.

(சு) மடி = சோம்பல், துயில் = உறக்கம், மந்தம் = தாமதச் செயல், மறப்பு = மறதி, யாதும் = எந்தச்செயலையும், முந்துகுடி = முந்திய காலந்தொடங்கிச் சம்பந்தப்பட்டு வந்த குலம், துணை = (மனைவிக்கு நல்ல)துணைவனுவான்.

(எ) கள்ளான் = (பிறர் பொருளைக்)களவுசெய்யாதவன், களிஆடான் = கள்ளைக் குடித்தாடாதவன், பிறர்மனைபால் = அயலார் மனைவியரிடத்தில், காதல் கொள்ளான் = இச்சை வைக்காதவன், மனைவிகுணம் உவப்பான் = தன் மனைவியினது நற்குணத்தை மகிழ்பவன், எள்ளான் = (மனைவியை காரணமின்றி)இகழ்ந்துகைவிடாதவன், மணவாளன் ஆம் = மணஞ்செய்துகொளளுதற்குரியவனுவான்.

(அ) நல்குதல் ஆல் = கொடுப்பதினுலே, அனையாய் = ஒத்தவளே, காதனமைஉள்ளம்கலந்து = ஆசையுடையமனதுள்ளேகலந்து, காதலவன் = அவ்வாசைக்கணவன், நாதன் ஆம் = இறைவனுவான்.

(கூ) தோய்கணவன் = (மனதிலும்உடலிலும்)கலந்தநாயகன் (கணவன் = கண்போன்றவன்), மெய்யை = உடலை, மேவி இருந்து, சுகவினைவு செய்ததால் = இன்பம் பெருகச் செய்ததினுலே, தேர் = ஆராய்ந்தறி.

(ய) ஏந்துஇழையே = ஆபரணமணிந்தவளே, இயைந்து = மனமிசைந்து, எத்திறத்தும் = (செல்வம் வறுமை களில்) எந்தவகையிலும்.

## ச-வது—மடந்தை யியல்

யச முதல் யகூ வரைவயதுள்ள = பெண்கள் கொள்கை.

## ௬-வது அதிகாரம்

கற்புடைமை = கணவன்சொல்லைக் கடவாமலொழுகித் தன்னைக்காத்தலையுடையவளாயிருத்தல்.

(௧) கொழுநன் = கணவனை, தேன்மொழி = தேன்போல (க்கேட்போர் மனதுக்கு இனிக்குஞ்)சொல்லையுடைய பெண், பெய்யும் என்னில் = பெய்யுமானால், அற்புதத்தெய்விகம் = அதிசயிக்கத்தக்க தெய்வத்தன்மை (கற்பே).

(௨) உண்பிப்பாள் = உண்ணச்செய்வாள், அத்தன் = தந்தை, மன்னும் = நிலைபெறுகிற, மல்குவிப்பாள் = பெருகச்செய்வாள், துன்னு = அடர்ந்த, துணை = (ஆலோசனைக்குத) துணைவி.

(௩) இன்துணை = இன்பத்துணைவன், சுகம்செய்து = இன்பமுண்டாகச்செய்து, வல் அமைச்சன் இல் = ஆலோசனையில் வலிய மந்திரியைப்போல, சூழ்ச்சிக்கு = ஆலோசனை சொல்லுதற்கு, கமைசிர் = பெருமையும் சிறப்பும்பொருந்திய.

(௪) குறிப்பின்வழி ஒழுகி = கருத்தின்படி நடந்து, வருவாய் பொருள் = சம்பாதிக்கும் பொருள், வளம்படுத்து வாளைச்சேர்ந்து = பெருகிச் சிறப்படையச்செய்யும் மனைவியையடைந்து, திரு உம் = இலக்குமியும், பணிபுரிவாள் = ஏவிய தொழிலைச் செய்வாள்.

(௫) அடிவருடி = (கணவனது) பாதம் பிடித்துக்கொண்டிருந்து, பின் = (கணவன் தூங்கின) பின்பு, முன் = (அவன் எழுவதற்கு) முன்னே, பெண்கள் முடிவருடும் = (தன்னை வணங்குகின்ற உலகத்துப்) பெண்களுடைய தலைகள் உராஞ்சுகின்ற, தாள் = பாதங்களையுடைய.

(௬) மாற்றவளுக்கு = சககளத்திக்கு, சீற்றம் = கோவம், எய்தாமல் = (மனதில்) உண்டாகாமல், நன்கு உயரும் = நன்றாக உயரத்தக்க.

(எ) கொழுநன் பெற்ற=கணவனைப் பெற்ற, இன்கேளிர் =(மனதுக்கு) இனிய சுற்றத்தார், அருத்தி=உண்ணச்செய்து, நன்குஓதி=நல்ல உபசாரவார்த்தைகள் சொல்லி, போற்றி=உபசரித்து, தன்காத்து=தானே தன்னை (மனநிறையால்) காவல் செய்து, தோற்றுவாள்=உண்டாக்குபவள்.

(அ) நலித்திடினும்—வருத்தினாலும், பெண்திரு=பெண்களுக்குள்ளே இலக்குமிபோல் வாள்.

(கூ) கொண்கன்=கணவன், வசப்படுதல் வேண்டி=தன் கருத்துக்கிசைந்து நடத்தலைவிரும்பி, நோய்செய்வர்=கொடிய நோயை(க்கணவனுக்கு)உண்டாக்கி விடுவார்கள்.

(ய) நிறை=மனோதிடம், சிறைகாத்தல்=காவலில்வைத்துக் காப்பது, நிறைசெல்வன்=நிறைந்த செல்வமுடையான் ஒருவன், கள்வன்=திருடன், ஆவனேல்=ஆவானானால்,பொன் பொருவும்=பொன் போல் அருமையான.

## ய-ம் அதிகாரம்

கூடாஒழுக்கம்=(குலப்பெண்களுக்குத்) தகாத செய்கை.

(க) செயல்=வேலைசெய்ய, வாய்மை இலாமை=பொய் பேசுதல், மிதம்=குறைவும், மட்டு=அளவும், நோய்மைக்கு=நோயுண்டாதற்கு, காணில்=யோசித்தால், வார்அணி பூண்=இரவிக்கையும் ஆபரணமும் அணிந்த.

(உ) தகுதிக்கு ஏலாத=பொருள் நிலைமைக்குப் பொருந்தாத, தமனியம்=பொன், ஈகஎன=கொடுக்க என்று, கள்ஆதி=கள் முதலிய மயக்கப் பொருள்களை, கோள்=கொள்கை.

(ஙா) பேய்=பிசாசு உண்டெனல், ஏவல்=சூனியஞ்செய்தல், கோள்=கிரகசாரம், கொள்கை=மெய்யென்று நம்புதல், வெறியாடல்=ஆடு முதலிய வற்றைப், பலியிடல் விதி உண்டாம் என்று=விதியினால் எல்லாம் வரும் என்று நினைத்து, வேட்கை=விரும்புகிற, பொருள்=செயல்கள், புன்மகளிர்=இழிவான பெண்கள்.

(ச) எள்ளல்=நிந்தித்தல், நயவா=(நல்லோர்)விரும்பாத, குறை=குற்றம், நாட்டல்=கற்பித்துச் சொல்லல்.

(ரு) கடைத்தலைஇல்=தலைவாயிலில், ஆடவர்கள்=அயல் ஆண் பிள்ளைகள், மேல் தூசு,=மேலாடை, தொல்=பழைய, தேசு=(பெருமையாகிய)பிரகாசத்தை.

(சா) தமர்=சொந்த மனுடர், அன்பர்=அன்புடையோர், இகழ்தல்=அசட்டை செய்தல், முந்து அறியார்=முன் பழகாதவர், முகத்தல்=மகிழ்ந்து கொள்ளல், தனித்தல்= தனியிருத்தல், வெம்மைதுயர்செய்=கொடிய துன்பத்தை உண்டாக்குகிற.

(எ) காதலவன்=கணவன், காமுற்று=விரும்பி, செய்யாமை=செய்யாதிருத்தலும், வாதம் எதிர் பேசல்=எதிர்த்து வழக்குப்பேசுதலும், வலிந்திருத்தல்=மோடியாயிருத்தலும், ஏதிலன்=பகைவி, அன்புறுதல்=விரும்புதல், அயலில்=அன்னியரிடத்தில், பழி உரைத்தல்=(கணவன்)பழிப்பைச் சொல்லுதலும், துன்பு உறு=துன்பமடைதற்குரிய.

(அ) தமரை=சுற்றத்தாரை, போற்ருது=உபசரிக்காமல், இகழ்தல்=நிந்தித்தல், வன்கோள்=(கணவனிடத்து அவர் மேல்) வலியகுற்றம், மாறுசெயல்=பகையுண்டாக்கல், தன் கேள்கட்கு=தன்னுடைய சுற்றத்தாருக்கு, இல்லின்=வீட்டிலுள்ள.

(கூ) நன்சொல்இன்உம்=(கணவனது) நல்லசொல்லிலும், நாட்டுவாள்=தாபிப்பாள், புறத்து=வெளியிலே, வன்சொல்குவ=கடிந்துபேசுதற்கே, வன்கண்மை=இரக்கமில்லாத.

(ய) பண்டத்தை=பொருள்களை, மாற்றி=விற்று, ஒளிப்பாள்=மறைப்பவள், கள்ளி=திருடி; தீன்பல தின்பாள் =பலதீனி தின்பவள், கிளையை=சுற்றத்தாரை, எள்ளி=நிந்தித்து, இறைவன் தலைப்பணிப்பாள்=கணவனையேவிவேலை வாங்குமவள்.

## ௬௧-ம் அதிகாரம்

மனைமகன் = நாயகனுக்கு, துணைசெயல் = இல்லறத்து ணை வியாயிருந்து குடித்தனஞ் செய்தல்.

(க) மடம் = (கல்வியறிவு பெற்றும் கணவன்முன்) அறியாள்போலிருத்தல், அச்சம் = பழிப்புக்கு அஞ்சுதல், பயிர்ப்பு = (அயலார் சொல்லிலும்பழக்கத்திலும்) அருவருத்தல், பூண்டமர்ந்த = ஆபரணமாக விரும்பிய, மாண = பெருமையடைய, குறித்து = ஆராயந்தறிந்து.

(உ) ஞாயிறுஎழ = சூரியன்உதிக்க (முன்னே), ஆய் = ஆய்ந்து சமைத்த, உற்ற = பொருந்திய, பொருள் செலவில் = பொருள் சம்பாதிக்குஞ் செயலில், நண்புஇல் = சிநேகனைப் போல, நடத்துவள் = செலுத்துமவளே.

(ங) செய்தொழிலினால் = பொருள்சம்பாதிக்கும் முயற்சியால், கொண்கன் = கணவன், பொய்தொடரா = பொய்சேராத(மெய்யான), மெய்தொடர்ந்த = (நாயகனது) உடம்பில் உண்டான, மகிழ்வு இன்பம்செய்வாள் = மகிழ்ச்சியையும் இன்பத்தையும் உண்டாக்குவாள்.

(ச) போந்த = வந்த, முதிர்ச்சி = முற்றிய, அவாவி = ஆசைகொண்டு, தெருள்முதிர்ச்சி = கல்விமுதிர்ந்த, துா = இனிய, சூழ்ச்சிஆல் = (பொருள்சம்பாதிக்கு முபாயங்களைச்சொல்லும் (ஆலோசனையினால், நன்கு = நன்றாக.

(ரு) உடைதிருத்தல் = உடுப்பைத்திருத்தஞ்செய்தல், உற்றதொழிற்கு ஆம்படை = (கணவன்) செய்யுந்தொழிலுக்கு உபயோகமாகிற ஆயுதங்களை, செய்யுந்தொழில் = (கணவன்) செய்யும் வேலையை, நடைதிருந்தபயின்று = தானும் முறைதிருத்தமாகக்கற்று, துணைமை = உதவி.

(சு) கலை உணர்வு ஆல் = கல்வியறிவினால், உடன்பட்டால் = உதவியாகிச் செய்தால், நிற்றல் = நிலையான.

(எ) மாலையில்=முன்னிரவில், சிலம் உற=விவேகமமைய, யாழ் இசைத்து=வீணைமீட்டி, ஆழுவிப்பாள்=முழுகச் செய்வாள், பெண் அமிர்தம் ஆம்=(கணவனுக்குப்)பெண்ணுருவமாய் வந்த தேவாமிர்தமாவாள்.

(அ) மாட்சிபரவும் நூல்=மகத்துவ மிகுந்த சாத்திரப் பொருள்களில், ஐயம்பகர்தல்=சந்தேகந்தீரச் சொல்லுதல், பொரு=போருக்கு உரிய, வெம்பயடை திருத்தல்=கொடி ஆயுதங்களை (உபயோகிக்குந்தொழிலில் உண்டாகுங்குற்றங்களைத்) திருந்தச்செய்தல், ஏவல் பரிசனத்தை=பணிவிடை செய்வோரை, உடையதொழில்=உரியசெயல்களாம்.

(கூ) காலிஇனம்=பசுமுதலாகிய கால் நடைச்சாதிகளை, பல்குவித்தல்=விருத்தியாகச் செய்தல், நறும்=மணக்கும், மாற்றி=விற்று, ஈட்டல்=சம்பாதித்தல், கூர்=மிகுந்த.

(ய) பணிகள்=ஆபரணங்கள், நல் பண்பு=நல்ல குணங்களை, நன்குஆய்தல்=நன்ருக ஆராய்ந்தெடுத்தல், விலைவரைதல்=விலைக்குவாங்குதல் விற்றல்.

## ரு-வது—அரிவை யியல்

இருபது முதல் இருபத்தைந்துவரை வயதுள்ள பெண்களது ஒழுக்கம்.

### யஉ-ம் அதிகாரம்

### மருத்துவம்=வயித்தியம்.

(க) துணிவுஆய்=தெளிவாக, அளவு=தகுதி, கடன்ஆம் =கடமையாம், முதல்மருந்து ஆம்=நோய்வராமல்முன்னே காக்கும் மருந்தாகும்.

(உ) மட்டு=அளவு, செயிர்இல்=குற்றமில்லாத, நீடு, நெடுங்காலம், அமரும்=உயிர்வாழ்ந்திருத்தற்குரிய, கூடல்= சேர்க்கை, இவை=இவ்விதமான அவசியச்செயல்களை, காலத்தால் கொள்=உரியகாலங்களில் செய்க.

(௩) உடலின் கருவிகள் = உடம்பிலுள்ள (குடல்முதலிய) உறுப்புகள், தான் = (உண்ணும் செயல்) தானே, பிணிவழிக்குத் தகைதல் = நோய் வரும் வழியை யடைக்குங்கல்லாகும்.

(௪) சொன்னபடி = (பொருட்டேய்மைதற்றாமையதிகாரங்களில்) சொல்லியபடி, ஆயுநூல் = வயித்தியசாத்திரம்.

(௫) குருநோய் = அம்மை, முன்னான = முதலாகிய, போற்றல் = காத்தல், தெருள் = தேர்ச்சி.

(௬) பிணியர்செய்கை = நோயாளரது (பத்தியச்) செய்கை, போழ்து = காலம், நேர்ஒத்தால் = பொருத்த மாயிருந்தால், மூலம் இன்னஎன = காரணம் இன்னவையென்று, ஆளல் = மருந்து கொடுத்தல்.

(௭) காரம் = காரமருந்து, அயல்காலையில் = மறுநாளுதயத்தில், ஏரண்ட நெய்யால் = ஆமணக்கு நெய்யூட்டி, குழவிகளை = குழந்தைகளை, நையாமல் = நோயால் மெலியாமல்.

(௮) பால்தாய் = பாலூட்டுந்தாய், பிள்ளைக்குப் பிணிவருத்தும் = பிள்ளைக்கு நோயுண்டாகி வருந்தச்செய்யத்தக்க, கொள்ளாமை = உண்ணுதிருத்தல், உள் ஆரும் = வயிற்றிலுள் உண்டாகிற, முறை = (தாயினது) கடமை.

(௯) திங்கள் = மாதம், பெருகும் = (கெர்ப்பத்தில்பிள்ளை) வளர்தற்குரிய, அதவம் பிழிதல் = மூலிகைச்சாறு பிழிந்து குடிப்பித்தல், சேய்கள் கு உம் = பிள்ளைகளுக்கும்

(௰) மாறுஉறு = உடலுக்குப்பொருந்தாத, நசிக்கும்நோய் = (உடம்பை) அழிக்கும்நோவை (யுண்டாக்குதற்குரிய), வித்துஆகும் = காரணமாகும்,

௰௩-ம்-அதிகாரம்

**மக்கள் = பிள்ளைகளை, போற்றல் = பாதுகாத்து வளர்த்தல்.**

(௧) ஈன்றோர் = (பிள்ளைகளைப்) பெற்றவரது, இசைநடை

=இசைந்த ஒழுக்கம், வான்தோய்குடியும்=உயர்ந்தகுடிப்பி றப்பும்,மற்றுஆும்=பிறவும்ஆகிய,சான்றுஆகி=சாட்சியாகி, வாழ்வார்ஐ=நெடுங்காலம் வாழும் அப்பிள்ளைகளை, போற்ற ல்=(நடத்திக்)காத்தல், தலை=முதன்மையான செயல்.

(உ) வைகறையில்=விடியற்காலையில்,கருதுவித்து=நினை க்கச்செய்து, ஓதும்கழகத்தில்நண்ண=படிக்கும் பாடசாலை யில்சேரவும், கலை=நூல்கற்கவும், பயிற்றல் நன்று=பழக்கு தல்நல்லசெய்கை.

(௩) மேவும்=உண்டாகும், எய்யாமல்=தளராமல், கண் கவின=கண்ணுக்கு அழகாக, கோலம்=அலங்காரம்.

(௪) மெய்குலைய=உடம்புநடுங்க, அச்சுஉறுத்தி=பயமு றுத்தி, மெலிக்காமல்=மெலியச்செய்யாமல், இன=இனிய, கவின்மெய்சேர்=அழகுஉருவெடுத்துவந்த, மாதுஇனியாய் =பெண்தன்மையாகிய இன்பமுடையவளே, மன்னும்=நி லைபெற்ற, வலி=பலம், தீதுஇல்=தீங்கில்லாத.

(௫) ஏழு ஈறு ஆும்=ஏழுவருடம் கடைசியாயுள்ள, பேதை இல் ஏ=பேதைப்பருவத்தில், எண்ணும்=மதிக்கின்ற, ஏழி ன்மேல்=ஏழுக்குமேல் (பெதும்பைப்பருவத்திலே),பொற் பு அமைந்த=அழகுநிறைந்த, கற்பு உம்=கற்பிலக்கணமும், தெருள் உறுத்து=உணரச்செய்து.

(௬) நன்றி=நன்மை, தோய்=மனங்கலந்த, கணவன்தன் உள்ளத்தும்=நாயகன்தனது மனதிலேயும், உயர்மாதர்தம் தலைமீதும்=உயர்ந்தபெண்கள் தங்கள் தலைமேலேயும், கொ ள்ள=வைத்துக்கொள்ளும்படி, குறி=அறிவாய்.

(௭) மல்கு=வளர்கின்ற, தம் இன்பு உரு ஆனோர்=தமது இன்பமே உருவாய்வந்தவர், ஆனக்கால்=(அவைகளே மக் கள்) ஆகியிருந்தால், செம்மை=சீர்திருத்தம்.

(௮) குறளை=கோள்சொல்லுதல், புகலாது=சொல்லாம ல், விழைந்து=விரும்பி, உரைக்கச்செய்க = பேசப்பழக்கு

வாய், நண்ணியக்கால்=பழக்கமானால், பொன்று அளவும்=சாகுங்காலபரியந்தம், போன்ம்=போலும்.

(௯) மனைக்குள்உற்று=வீட்டுக்குள் இருந்து,பழுமரத்துள் உற்ற=பழுக்கும்மரத்தினுள்பொருந்திய, ஆம்கனிஆல்வு=உண்டாகும்பழத்தினாலே, வெளிப்பாடுஆம்=வெளிப்படும்.

(௰) வல்ஓங்கல்=வலியமலையில், வேய்உள்=மூங்கிலுள்ளிருந்து, சூழல்எலாம்=சூழ்ந்திருக்கும்மரமுதலியஎல்லாம், மன்வளம்=மிகவளப்பம், மாயும்=அழியும்.

## ௬-வது—தெரிவை யியல்

இருபத்தாறுமுதல் முப்பத்தொன்று வரையிலும் செல்கின்ற வயதுடைய பெண்களது கொள்கை.

### ௰௪-ம் அதிகாரம்

சுற்றந்தழீஇ விருந்து ஓம்பல்=உறவினரை (க்கொடை முதலியசெய்து) தழுவுதலும் புதியோரை (உணவு முதலிய கொடுத்து) உபசரித்தலும்.

(௧) வற்றுவளம்=குறையாதசெல்வம், சுற்றத்தால்=உறவினரால், ஓங்கி துலங்கும்=உயர்ந்து விளங்கும், மல்கிசீர்த்து=வளர்ந்து சிறந்து, பயன் எய்தும்=பயனைத்தரும்.

(௨) சூழ்ந்து=(தன்னைச்) சுற்றியிருந்து, தொகு=திரண்ட, முற்றுஉம்=(காலம்) முழுவதும், நிரை=வரிசையாகிய, அதரம்=உதடு,அண்ணம்=மேல்வாய், நா=நாவானது, நல் இரதம்=நல்ல சுவையை.

(௩) விளையும்=முளைத்து வளர்கிற, பராரை=பருத்த அடியையுடைய, மேல்உறுப்புஆய்=மேலவயவமாகி, கிளை அன்னர்=கிளைகளையொப்பர், மக்கள்கிளைஞர் = மனுடருக்குச் சுற்றத்தாரும், குற்றிஆம்=மொட்டைக்கட்டையாகும், கூடும்=தம்மைச்சூழ்ந்திருக்கும், மற்றுயாது ஆவர்= (அக்கட்டைபோலாகாமல்) வேறு என்னவர்.

(௪) ஆக்கம் உள=செல்வமுடைய, உண்ண=(தம்பொருளை அவர்) உண்ண (க்கொடுத்து), அன்புகூர்ந்து=(அவரிடத்து) அன்புநிறைந்தவராகி, தாம்துய்ப்ப=தாமும் உண்பார், சிறுகுற்றங் கொள்ளார்=(அச்சுற்றத்தாரிடத்துக்கண்ட) சிறுகுற்றத்தைக் குற்றமாகக் கொள்ளார்.

(௫) பல்தொகை=பற்கூட்டம், கறித்திடின்உம்= கடித்தாலும், கண்=கண்ணை, களையப்படா=(அப்பல்லும் விரலும்) களைந்தெறியப்படுவன அல்ல (அதுபோல), நாடி=பார்த்து, காணில்=ஆராய்ந்தால்.

(௬) கிளர்ச்சி=விளங்குகிற, வளம்=(உற்றாரது) செல்வம்' கேடுஉள்ளும்=கெடுதலைநினைக்கும், நோனார்=பொறுமையுடையோரும், தளர்ச்சி=வறுமை, நகும்=நகைக்கும், சீர்சாலார்=இழிந்தோரும், வளர்ச்சி=வளருகின்ற, பிழை, புகல்வார்= குற்றஞ் சொல்வோரும், இன்னோர்=இவர்போன்றவரும், தணக்கத்தகும் =நீக்கிவிடத்தக்க.

(௭) நந்தாத மருந்து உம்=அமிர்தமும், நயப்பது அன்று ஆகும்=நஞ்சு ஆகும், விருந்து=புதியர், ஓம்பி=உபசரித்து, வேள்வியரை=உபகாரிகளை, மேல்=சுவர்க்கத்திலுள்ள, பார்த்து இருப்பர்=வரவை எதிர்பார்த்திருப்பர்.

(௮) துறந்தோர்=(மனைவாழ்வை) விட்டவர், கலை=சாத்திரம், இறந்தோர்=(அநாதராய்ச்) செத்தோர், நிரப்போர்=தரித்திரர், சிந்தை உற்று=மனதில் அன்புபொருந்தி.

(௯) ஆர்வம்= பிரியம், வண்மை=ஈகைக்குணம், இம்மை மறுமை=இப்பிறப்பு வருபிறப்பு, தொகும்=அதிகரிக்கும்.

௰ எதிலார்=அயலார், சூழ்வாழ்வு=சூழ்ந்துண்ண வாழும் வாழ்வு, நள்=நடு, அற்ற=செல்வம் அற்ற, மிடியருக்கு இன்றி=தரித்திரருக்குக் கொடாமல், மிகைஉடையார்க்கு= செல்வ மிகுதியுடை யோருக்கு, எதிர் கடன்=கைமாற்றுக் கடன்.

## எ-வது-பேரிளம் பெண்ணியல்.

முப்பத்தி ரண்டுமுதல் நாற்பதுவரையும் செல்லும் வயதுடைய பெண்கள் கொள்கை.

ரு-ம் அதிகாரம்

மக்கள் மணம் வினை = மக்களுக்குக் கலியாணஞ் செய்யுமுறைமை.

(க) மணம்ஏ = கலியாணமே, உலகம் வருதல்கு மூலம் = உயிர்கள் பிறப்பதற்குக் காரணம், அனைத்து உயிர்க்கும = எல்லாவுயிருக்கும், இன்பம்விளை = இன்பம் (ஆகியபயிர்) உண்டாவதற்கு உரிய, இதனின் உறுதி = இக்கலியாணத்திலும் மிகுந்தபயன (என்று), என்புகல்வது = எதனைச்சொல்வது.

(உ) அறம்உம் = ஒழுக்கமும், பொருள்உம் = செல்வப்பொருளும் (ஆகியஇவ்விரண்டும்), ஆர் = அருமையான, சாதனம் ஆம் = கருவிகளாகும், பேணல்உறும் = விரும்பப்பட்ட, அதன்இன் = மணத்தினும், ஏற்றம் = மேலான.

(ங) அன்னாய் = தாயானவளே, பருவம் நாடி = விளையுங்கால மறிந்து, பருவத்தே = (மணத்தை விரும்பும்) பிராயத்திலே, பண்பு = (விரும்புங்)குணமுள்ள.

(ச) மைந்தன் தான் = (உனது)புத்திரன், ஆண்டு = வயது, சங்கைஇல் = மதிப்பில், ஓர்இருபான் = ஓர்இருபது, சார்ந்தஅதன்மேல் = நிறைந்தபின்பு, மங்கைபருவத்து = மங்கைப் பருவமடைந்த, துங்கம் = மேன்மையான, குடி = குலம், குணம்மருவி = நன்மையடைந்து.

(ரு) மணம்உவந்த = கலியாணத்தைவிரும்பின, வல் = பலமுள்ள, தம்குணம்உவந்து = ஒருவர்குணத்தை ஒருவர் மகிழ்ந்து, கூடும் = சேருகிற, வித்தக ஆசான் = ஞானம்முற்றிய ஆசாரி

யனும், வேகம்மதிமாணவன்=தீவிரபுத்தி யுள்ள சீடன், தத்துவ நூல்=ஞான சாத்திரத்தை, ஆய்தல்தகும்=ஆராய்ந்துபயனடைதலொக்கு.

(சு) ஆம்=உண்டாகின்ற, முந்து=முதன்மைப்பட்ட, மாமிநாடு=மாமி(யாவாளென்று)அறி.

(எ) பெண் அணங்கார்ஐ=பெண் மக்கள் ஆகிய அழகியனை, சீர்=சிறந்த, பெதும்பைகடந்து=பெதும்பைப்பருவம் முடிந்து, மணம் உன்னயக்கும்=கலியாணத்தை மனதினுள்ளேவிரும்புகிற, மங்கைஉயர்பதத்தில்=மங்கை யாகிய உயர்ந்த பருவத்தில், வள்நயசீர்=செல்வமும் நயகுணமும் கொடைச் சிறப்பு முள்ள, புரிந்து=விரும்பி, மணம் நல்கி=கலியாணஞ் செய்யக் கொடுத்து, அவர் காப்பு அடைய=அம்மாப்பிள்ளைகள் காவல் பெண்களுக்குப் பொருந்த.

(அ) ஐயம்=சந்தேகம், ஒன்ருசிருர்=(கலியாணம் இன்னதென்று தெரிந்து)சம்மதியாத சிறுவர் களது, ஆங்கு ஒன்ரு=அதுபோலவே சம்மதியாத, சிறுமியரை=சிறு பெண்களை, ஒன்றுவித்து=உடன்படுத்தி, வாழ்க்கை=இன்பவாழவில், வறுமையர் ஆக=தரித்திரர் ஆகும்படி, செயலோ=செய்வதுவோ, மாண்பு=(பெற்ருேர்க்குப்) பெருமை.

(கூ) பிள்ளைமைஇல்=பிள்ளைப் பருவத்தில், உள் அழிவார்=மனம் வருந்துவார், உள்ளில்=ஆலோசித்தால்,

(ய) முற்ற கற்ருய்=முழுதுங்கற்றவளே, மங்கலம்=கலியாண (க்குறி யாகிய), பொன் நாண்=பொற்ருலிக் கயிற்றை, கற்பு நெறி=கற்பு(நூல் சொல்லிய நல் லொழுக்கமான, தங்கம்=மேன்மையான, மணநாண்=தாலியை, கருமம் கருது=நல்ல செயலாம் யோசித்துப்பார்,

## யகூ-ம் அதிகாரம்

**நோன்பு—விரதமனுட்டிதல்.**

(க) கருத்தில் = எண்ணத்துக்கு, பேதம் இன்றி = மாறு பாடில்லாமல், உடல் அன்னார் = (கணவனது) உடம்பை ஒப்பார், மெய் = உடம்பு, உயிரின் வழியே = உயிர் கருதிய வழியிலேயே, விடல் இன்றி = விடாமல் தொடர்ந்து.

(உ) இரண்டு ஒன்றி = இரண்டும் ஒருமித்து, மாண்டு = மாட்சிமைப்பட்டு, கோடாமல் = மாறுபடாமல், வனம் = காட்டிலே, மற்று ஏன் = வேறு என்னத்திற்கு.

(ங) கொள் = (அவ்வுயிரைத்) தாங்கும், பின் = பின்பு, கூடும் = சேருவதாகிய, அறத்தின் பயன் உள் = தவப்பலத்திலே கூறு ஒன்று = ஒருபங்கு, அன்றே = அல்லவோ, தேடுபொருள் = சம்பாதிக்கும் பொருளில் (ஒருபங்கு), நீ துய்த்தல்தேர் = நீ உண்பதனால் அறிவாய்.

(ச) மூர்த்திகளை = தேவர்களை, முன்னு பயன் = நினைத்த பொருள், சீர்த்த = சிறக்கப்பெற்ற, நாள் = நாளில், எல்லாம் = நோன்புச் செயல்களை யெல்லாம், நுன் = உன்னுடைய, பொலிந்த பூ = மலர்ந்த பூவை (அணிந்த).

(ரு) மாறு ஆக = விரோதமாக, பெற்ற = பிறருபதேசத்தால்) மேற்கொண்ட, தரா = கொடாதனவாம், கொண்கன் நயந்தநெறியே = கணவன் விரும்பிக்கொண்ட மார்க்கத்திலே.

(சா) முற்றி = முடித்து, அறுக்கும், = ஒழிக்கவல்ல, பேணி = விரும்பி, துறப்புஉற்று = (இல்லறத்தை) நீங்கி, காப்பாள் = (கூடியிருந்து) காப்பவள், இன்பவீட்டில் = மோட்சத்தில்.

(எ) உற்ற = தனக்குக்கிடைத்த, மருவி = தழுவி, பிரிவுஏது = பிரிவதில்லை, உழி = இடம்.

(அ) வெம் துயர் உற்றாலும் = கொடியதுன்ப மடைந்தாலும், விடல் இல்லான் = பிரியாதகணவன், நீத்தபொழுதத்து = (தெய்வகதியாலாகிலும் உலககாரியத்தாலாகிலும்) பிரிந்த காலத்தில், உயிர்நீத்த = உயிர்நீங்கின, நீ நோற்பாய் = நீ (கணவனை நினைத்து) தவஞ்செய்வாய்.

(௩) அன்பன் = பாங்கன் = கணவன், அணையும்காறும் = சேருகிறவரைக்கும், சார்சுவை = உருசியுள்ள, இன்புஉறுத்தும்பாயல் = சுகமுண்டாக்குகிற படுக்கை, இன்ன = இவை போன்ற சுககாரணங்களை.

(௰) எம்மதத்தோர்உம் = எல்லாச்சமயத்துப் பெண்களும், சம்மதத்தோர் = துணிபுள்ளவர், மதம்தான் = (அனுசரிக்கும்)சமயமாவது, காத்து = (கற்பால்) காவல்செய்து, எம்மைஉம் = எந்தப்பிறப்பிலும்.

## ௭-வது—ஒழிபியல்

முன்னை இயல்களில் சொல்லாமலொழிந்த பொருள்களைச் சொல்லும பகுதி.

### ௰௭-ம் அதிகாரம்.

மகிழ் ஆட்டு = மகிழ்ச்சி (க்குக்காரணமாகிய) விளையாட்டு.

(௧) பண்ணைவிளையாடல் = சிறுபெண்கள் கூடி மணலில்விளையாடுதல்,பாவை = பதுமை,பொதிதல் = கையால்மூடுதல், கழங்கு = கூழங்கல், வண்ணச்சில் = வர்ணச்சிந்தாக்கு, கதை = கதைசொல்லல், நொடிசொல் = விடுகதைசொல்லல், பேதையர் = பேதைப்பருவப் பெண்கள், செய்கை = செய்யும் விளையாட்டு.

(௨) இணை = இரட்டை, அணிவகுத்தல் = வரிசையாக நிறுத்தி விளையாடல், தம்மில் = தங்களுள் (ஒருவரையொருவர்), கரம்பற்றிசூழல் = கைபிடித்துச் சுழலுதல், கவின் ஆர் = அழகுள்ள, நிரம்பிய = (அவயவங்களும் அழகும்) நிறைந்த, நேர் = (இவ்விளையாட்டுகள்) ஒத்தவைகளாம்.

(௩) விழா = சிறப்பு, துங்கஎழில் = மேலான அழகுள்ள, நல்லஇயல் = நல்லொழுக்கமான, சூழ் = (சுற்றத்தார்) சூழும், ஆடல் மகிழ்வு = மகிழ்ச்சி விளையாட்டு.